உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௫.] ஈசுவர௵ தைமீ [பகுதி-௩.

Vol. 35. January—February 1938. No. 3.

பழநி மாம்பழக்
கவிச்சிங்க நாவலர் சரிதம்

[௬௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

11. இராமநாதபுரஞ் சென்றதும்—
சேதுஸம்ஸ்தானாதிபதிகளைக் கண்டதும்

பன்னிரண்டாண்டில் ஆங்கிலத்திற் கற்கவேண்டிய நூல்களனைத்தையும் கசடறக்கற்றுக் கவிபாடுந்திறமையும் பெற்றுப் புகழுற்றுவிளங்கிய 'மில்டன்' (Milton) 'போப்' (Pope) 'மேக்காலே' (Macaulay) முதலிய ஆங்கிலப்புலவர்களைப்போலவே, மிகவும் சிறுவராகிய நம் மாம்பழக்கவியும், பன்னிரண்டாண்டில் தமிழ்மொழியை ஐயந்திரிபறக்கற்றுப் பாப் பாவினங்களையும், யமகம் திரிபு அடிமடக்கு ஏகபாதம் நிரோட்டகம் நாகபந்தம் முதலிய சித்திரகவிகளையும், புராணம் காவியம் பிரபந்தம் ஆதியவற்றையும்,

'ஐந்தைந்து நாழிகையில் ஆறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலைசொல்லத்
துகளிலா அந்தாதி ஏழுநா ழிகைதனிற்
றொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பரணியொரு நாண்முழுதுமே
பாரகா வியமெலாம் ஓரிரு தினத்திலே
பகரக் கொடிக்கட்டினேன்'

*

என்று தமது பேராற்றலை எடுத்தோதிய காளமேகக்கவிராயரைப் போல் அநாயாசமாய் விரைந்தகதியிற் பாடவல்ல சமர்த்தையும், புராணகாவியங்களுக்கு விரிவாகப் பொருளுரைக்கும் புலமையையும், அவையோர் கேட்டு வியந்து சிரக்கம்பம் கரக்கம்பம் செய்யுமாறு பிரசங்கஞ்செய்யும்வன்மையையும், பிறர்பாடிய பிரபந்தத்தைத் தாம் ஒருமுறை கேட்டவளவில் அதனைத் தாம் முன்னரே பாடிய பழைய பிரபந்தம் என்று மெய்ப்பிக்கும் திறமையையும் தமிழ்த்தெய்வமாகிய முருகன் அருளால் பெற்றிருந்தனர். இத் தகுதிகொண்டு இவர் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலரென்னும் படி விளங்கினர். இவரது தகுதியையும், விரைவாகக் கவிபாடும் சாமர்த்தியத்தையும் கண்டு மிகவும் வியந்த அறிஞர்கள், இவரைத் 'தமிழ்ச்சக்கரவர்த்தி' என்றும், 'கலைஞானபீடம்' என்றும், 'நாமடந்தையின் நல்லிருக்கை' என்றும் புகழ்ந்துகூறிக் கொண்டாடினர். அவர்கள் புகழ்மொழிக்குக் கவிராயர் முற்றும் தகுதியுடையவரென்பதற்கு, அவர் பிரபுக்களுக்கு எழுதிய சீட்டுக்கவிகளிற் காணப்படும் சொற்றொடர்கள் சிறந்தசான்றாகக் கொள்ளற்குரியன. அவை—'வித்வசாமர்த்திய ரத்தினதீபம்' 'தமிழ்மடந்தை திவ்யபொற் கமலாசனம்' 'விற்பன கலைஞானபீடம்' 'சாஸ்திராந்தரங்கம்' 'பிரபந்த அமிர்த பூரண விசித்திரகும்பம்,' 'புலவர் திலகம்,' 'மதுரப்பிரவாகம்,' 'சண்டப்பிரசண்டவாக்கி,' 'சபாஷ் என மதிக்கும் ரத்னம்,' 'பிரசங்க திவ்யம்' என்பன.

கவிராயரவர்கள் தமக்குத் தம் பெற்றோரால் இடப்பட்ட 'மாம்பழம்' என்ற பெயருக்கேற்பக் கேட்போர்செவி குளிரும்படி யாவரிடத்தும் இன்னுரையாடியும், விருப்பங்கொள்ளும்வகையில் விநயமாக ஒழுகியும், சாதுரியமும் கற்பனையும் கதிக்கப் புதுப்புதுக் கருத்துக்கள் பூரித்தெழக் கவிகளை நவநவமாய்ப் பாடியும் வந்தனர். இவற்றால், இவர் பெயர் எங்கும் வியாபித்தது. ஆங்காங்குள்ள தமிழன்பர்கள் மிகுதியாக வந்துகூடி இவரைக் கண்டு களித்து அளவளாவினர். பலர் மாணாக்கர்களாக அமர்ந்தனர்.

இங்ஙனம் மாம்பழப்புலவர் மதிப்பும் பெருமையும் உடையராய்த் திகழ்கையில், அவர் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது.

அது—தம் மூதாதைகள் செல்வமிகும் மன்னர்ஸம்ஸ்தானங்களுக்குச் சென்று, ஆங்குத் தமது சிற்பசாத்திரப்பயிற்சியையும் சிற்றுளித்திறமையையும் சிறப்புறக் காட்டி அவ்வரசர்களது அன்பையும் ஆதரவையும் அடைந்து அவர்கள் மனமகிழ்ந்தளித்த வரிசைகளையும் பட்டம் முதலிய பெயர்களையும் பெற்றுப் பெருமை சிறந்து வாழ்ந்ததுபோல் தாமும் தமிழ்ப்பற்றும் கொடைநலமும் நிரம்பிய தமிழரசர்சபைகளுக்குச்சென்று தமது புலமையை விளக்கி வரிசைபலபெற்று வாழவேண்டும்.—என்பது.

இவ்வாறு தம்முள் எழுந்த எண்ணம், அவரை மேலும் மேலும் தூண்டிக்கொண்டேயிருந்தது. அப்பொழுது கவிராயருக்கு வயது பதினேழு நிரம்பியது. அவர் தம் மனத்தில் ஆழப்பதிந்து சதா நினைப்பூட்டிக்கொண்டிருக்கும் அந்த எண்ணத்தைத் தம்மைச் சூழவிருந்த சுற்றத்தார், பெற்றோர், அன்பர், அறிவாலுயர்ந்த ஆன்றோர் முதலியவர்களிடத்துக்கூறி அவர்களுடன் கலந்து ஆலோசித்தனர். அவர்களனைவரும் கவிராயர் கருதியது நல்லகாரியமென்றும், அவசியமானதென்றும், பறவைகள் பழுமரத்தையும் மீனினங்கள் நீர்நிறைந்த கயத்தையும் நாடிச்செல்வது இயற்கையென்றும், அவ்வாறே கற்றுவல்ல புலவர்கள் பொருட்கொடையாளரான புரவலரிருக்கைநாடிச்செல்வது முறைதானென்றும், நீவிரும் சிறந்த புலவீராதலால் ஸம்ஸ்தானங்களுக்குச்சென்று நுமது கல்வித்திறமையைக்காட்டி மேலான பரிசுகள் பெற்றுவருவதுதான் பெருமையுடையதென்றும் ஒருமுகமாய்க் கூறினர்.

அவர்கள் வாய்மொழி, தம் எண்ணத்திற்கு நல்வரவுகூறுவது போல் இருந்ததுகண்டு கவிராயர் மிகவும் களிப்படைந்தனர். மேலும், அவர், அப்பொழுது பழநிப்பதியில் பிரசித்திபெற்றவராகவும், தூரதேசங்களுக்குப் பலமுறை யாத்திரைசென்றுவந்தவராகவுமுள்ள தக்கார்சிலரை அடுத்து, அவர்களிடம் 'தமிழ்கேட்டு மகிழ்ந்து தகுதியறிந்து பரிசுதரும் தமிழ்நாட்டுஸம்ஸ்தானங்களில் தலைசிறந்துவிளங்குவது எது?' என்று வினவினர். அவர்களும் இராமநாதபுரத்துச் சேதுஸம்ஸ்தான அரசர்களே சேரசோழபாண்டியர்களுக்குப்பின்னர்த் தனித்தமிழரசர்கள் என்றும்,

அவர்களே தமிழ்கேட்டுருகும் உள்ளமுடையவர்களென்றும், பெயர்சிறந்த சேதுமன்னர்களில் ஒருவர், ஒருதுறைக்கோவை பாடிய போன்னுங்கால் அமிர்தகவிராயருக்குப் பதினுயிரம்பொன் பரிசளித்தா ரென்றும், அப்பரிசே சேதுபதிகள் தமிழபிமானமிக்கவர்க ளென்பதற்கும் புலவர்கள்தகுதியறிந்து சன்மானிப்பதிற் சிறந்த வர்களென்பதற்கும் சான்ரும் என்றும் கூறினர்.

அன்றியும், அச்சேதுமன்னர்கள், 'காக்குங் கருணையும்,கல்வி யும், கவிமதுரவாக்கும், வாழ்வும் தழைத்த திருவினர்களென்றும், அத்திருவுடையார் திருமாபிற் கற்றுவல்ல வித்துவான்களுக்கு வளர்ப்புத்தாயாகவும், பெருங்கொடைவள்ளலாகவும், இம்மைப் பயன்கருதாது மறுமைப்பயனேயே கருதியவராகவும் அக்காலத் தில் தமிழகத்தில் புலவர்களெனப் பெயர்சிறந்த பலர்க்கும் வேண் டிய உதவி, அவர்களனைவரையும் தமது அவைக்கழைத்து அவர்க ளுடன் அளவளாவிப் பொழுதுபோக்குதலேயே பெரும்பயனுகக் கொண்ட அருங்கலைவிநோதராகவும், புலவர்பெருந்தகையாகவும் விளங்குபவர், ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்களின் தந்தை யாகிய ஸ்ரீமான் பொன்னுச்சாமித்தேவரவர்களேஎன்றும் விளம்பினர்.

மேலும் அவர்கள், "இப்பொழுது அங்குத் திருமுடிபுனைந்து அரியாதனத்தமர்ந்து செங்கோல்செலுத்தி அரசுசெய்கின்றவர் ஸ்ரீ பொன்னுச்சாமித்தேவரவர்களுடைய அருமைச்சகோதரர் ஸ்ரீமான் முத்துராமலிங்கசேதுபதியவர்களென்றும், அவரும் இன் றமிழை இனிதுறக்கற்ற அறிஞரென்றும், ஈகையிற் சிறந்தவரென் றும், அவ்வரசர்சிகாமணியால் இயற்றப்பட்ட பிரபந்தங்கள் 'வள்ளிமணமாலை, முருகரநுபூதி, மும்மொழிமாலை, பிரும்மகைவல்யம், பாலபோதம், பிரபாகரமாலை, காயகப்பிரியா, ரசிகரஞ்சனம்' என்ற பெயர்களையுடையவையென்றும், அவ்வருமைநூல்கள் இனிமை யும் மேன்மையும் வாய்ந்தவைகள் என்றும் கூறினர்.

இங்ஙனம் விளக்கமாகக் கூறிய அவ்வன்பர்களது இன்ப மொழிகள், கவிராயர்க்குப் பெரிதும் உற்சாகத்தையூட்டின. அன்றே அவர் சேதுஸம்ஸ்தானத்துக்குச் சென்றுவருவதெனத் தீர்மானித்தனர். உடனே பிரயாணத்திற்கு நன்னுள் ஒன்றை

ஆராய்ந்து, குறித்த அச்சுபதினத்தில் உற்ருர் பெற்ருேர் உற வினர் முதலியவர்களிடத்தும் விடைபெற்றுத் தம் கையேட்டுக் காரர் உடன்வரச் சிவிகையூர்ந்து பழநியிலிருந்து பலகாத தூரத்துக்கு அப்பாலுள்ள இராமநாதபுரத்திற்கு வழிகண்டு சென்றனர். அங்ஙனம்சென்ற கவிராயர், ஆங்கடைந்து தமது தகுதிக்கேற்ற விடுதியொன்றை அமைத்துக்கொண்டு ஸம்ஸ்தா ஞதிபதிகளைக் காணும்பொருட்டுக் காத்துக்கொண்டிருந்தனர்.

அங்ஙனம் காத்திருந்தும், ஸ்ரீமான் பொன்னுச்சாமித்தேவரவர் களையும் அவர் உடன்பிறந்தார் ஸ்ரீமான் முத்துராமலிங்கசேதுபதி யவர்களையும் காணக் கவிராயருக்குச் சமயம்வாய்க்கவேயில்லை. ஆயினும், ஸம்ஸ்தானத்துப்புலவர்களும் பிறரும் கவிராயர் கவி பாடும் விரைவையும் கவியின் சுவையையும் நாவன்மையையும் நுண்ணறிவையும் கண்டு களித்தனர். எனினும், அவர்களுள் ஒருவ ரேனும் மாம்பழக்கவிராயர்செய்தியைச் சேதுபதியவர்களுக்குத் தெரிவித்தாரில்லை.

தம் கைப்பொருளைச் செலவுசெய்துகொண்டு இராமநாதபுரத் திற் பலநாள் தங்கியிருப்பது கவிராயர்மனத்தில் வருத்தத்தை விளைத்தது. கவிராயர் கற்றறிந்தவராதலால், 'பேராற்றலுடையார்க் கும் ஆகுநாளன்றி ஏற்றகருமம் செய்ய இயலா'தென்பதையும், "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்தகருமங்கள் ஆகா"வென்பதையும் நன்கறிந்து பொறுமைமேற்கொண்டு, கருதியவையனைத்தையும் பெறுவதற்குரிய நற்காலத்தின் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர்.

இங்ஙனம் கவிராயர் இராசதரிசனத்திற்குக் காத்துக்கொண் டிருந்தநாளில், ஒருநாள் ஸ்ரீமான் பொன்னுச்சாமித்தேவரவர்கள் தமது ஆஸ்தானத்துப் பட்டிமண்டபத்திருந்த வடமொழிவாணர் களையும் தென்மொழிப்புலவர்களையும் நோக்கி ஒரு வடமொழிச் சுலோகத்தைக்கூறிச் 'செந்நாப்புலவீர்! ஸ்ரீலக்ஷ்மீதேவியின் துதியா யுள்ள இச்சுலோகத்தின்பொருளைத் தமிழில் வெண்பாவில் அமைத்துக்கொணர்பவர்கட்குத் தக்கபரிசளிக்கப்படும்' என்று கூறி, அச்சுலோகத்தையும் கொடுத்தனர். அவர்களுள் ஒருவர்

அரசரைக்காணும்பொருட்டு நெடுநாளாகக் காத்துக்கொண்டிருக்கும் பழநிமாம்பழக்கவிராயரையடுத்து அச்சுலோகத்தைச்சொல்லி அதன்பொருளை விடாதமைத்து ஒருவெண்பா இயற்றித்தரும்படி வேண்டினர். அவர்விரும்பியவாறே கவிராயரும் வெண்பாவாகப் பாடித்தந்தனர். அவ்வெண்பாவை எடுத்துச்சென்ற புலவர், அதனை அரசசபையிற் காட்டிப் பரிசுபெறும்பொழுது அச்செய்யுளின் வரலாற்றை ஸ்ரீபொன்னுச்சாமித்தேவரிடத்துக் கூறினர். மாம்பழக் கவிராயர் பாடிக்கொடுத்த வெண்பா,

அம்புயமென் றுதுசகி யாதுனது தாள்சகிமா
ரம்புநிகர் பார்வைசகி யாதுமெய்யவ்—வம்புயங்கை
தாங்கலமெய் மால்வலுரஞ் சார்தலரி தென்னிலென்வாய்
வீங்குரையாற் றுங்கொறிரு வே.

என்பதாம்.

புலவர்தம் அறிவினூறிச் செஞ்சொல் உலாவும் நெஞ்சில் உலவி நன்னுவில் உதிக்கும் தீஞ்சுவைச்செய்யுட்களையும் வசன அமுதங்களையும் செவியாரக் கேட்டுச் சிந்தைமகிழ்வதே தாம் கருதும் இன்பங்களிலெல்லாம் தலைசிறந்த இன்பம் என எண்ணும் இயல்பினரும், பழுத்த ஞானமும், அறிவும், செல்வமும் மிக்கவருமான தேவரவர்கள், மாம்பழக்கவியின் சுவைமிக்க கவியைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து 'அவர், பேரறிஞரும் திருவருட்பிரசாதம் பெற்ற சீரியருமாவர்' எனச் செப்பி, அவரைக் காண்பதில் விருப்பமிக்குற்று உறப்பறையாயுள்ளவர்களை அரசர்பார்க்கொணுது என்றுள்ள உலகவழக்கத்துக்கு மாருக அப்பொழுதே தம் ஆஸ்தானத்துப் பரிசனர்களில் தக்கார் சிலரைக் கவிராயரை அழைத்து வருமாறு விடுத்தனர்.

ஆணைபெற்றவர்கள் விரைந்துசென்று, கவிராயரைக்கண்டு தேவரவர்களது கட்டளையை அறிவித்து, அவரை அரண்மனைக்கு எழுந்தருளுமாறு வேண்டினர். அந்நல்லுரை கேட்ட கவிராயர், இன்றுதான் தெய்வத்திற்கு நம்மீது திருவுள்ளம் இரங்கியதுபோலும் என்று மகிழ்ச்சியடைந்து, தம் கையேட்டினர்களுடன் அரசவையடைந்தனர். அங்ஙனம் அடைந்த கவிராயரைப்

பொன்னுச்சாமித்தேவர் நல்வரவேற்று இனிதுபசரித்து இருக்கை தந்து வீற்றிருக்கச்செய்தனர். அங்ஙனம் அமர்ந்தபிறகு கவிராயருடன் வந்த கற்றுச்சொல்லி, கவிராயருக்கு 'இராசசபையில் ஸ்ரீமான் பொன்னுச்சாமித்தேவரவர்களுடன் அவர் சகோதரர் ஸ்ரீமான் முத்துராமலிங்கசேதுபதி அரசரும் கொலுவீற்றிருப்பதைக் குறிப்பால் உணர்த்தினன். அதனை உணர்ந்ததும் மாம்பழக் கவிராயர், முதலில் அரசரைவணங்கும்முறையில் சேதுபதியை வணங்கி அவர்மீது வாழ்த்துதலாக ஒரு கவி பாடினர். அது,

விருத்தம்.

புகழான்ற நகமீன்ற பொன்னின்முலைக் கன்னியொரு புறந்த ழீஇப்பல்
லகிலாண்ட முதலாண்ட வருண்மோன சிவஞான வமலன் காக்க
பகர்பூங்காத் தொறும்பூவை பதங்கோவைச் செழும்பாவைப் படிக்குந் தேவை
நகரேந்த்ர சுமுக !முத்து ராமலிங்க பூபனை நாளுந் தானே.

என்பதாம்.

பின்னர், ஸ்ரீபொன்னுச்சாமித்தேவரைக் கவிராயர் வணங்கி அவர்மீதும் ஒரு வாழ்த்துக்கவி கூறினர். அது,

விருத்தம்.

மங்கரிய பங்கவிடர் வெங்கடலின் முங்கலுறு வார்மீ ளற்குன்
பொங்கவக ளங்கசமு கங்கருணை வங்கமது போலு மாலோ !
கொங்கர்சக ரங்கர்கள்க லிங்கர்பல ருங்கரமுன் கூப்பக் கீர்த்தி
தங்கவளர் துங்கஜய சிங்கமெனு மெங்கள்பொன்னுச் சாமி மாலே.

என்பதாம்.

இவ்வாறு கவிராயர், சேதுபதியையும் தேவரையும் வணங்கி வாழ்த்துக்கவிகள் பாடியபின்னர், அவ்விருவரையும்நோக்கி, 'அலர்மடந்தையின் அருளும் கலைமடந்தையின் கருணையும் இனிதுறப்பெற்று வண்டமிழ்வாணரின் வறுமையைப் போக்கி அவர்களை வாழ்விக்கும் வள்ளல்காள்! ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் திறம்பட இசைத்துத் தங்களை இன்பசாகரத்துள் ஆழ்த்தி மகிழவே நாம் இங்கடைந்தோம். நாம் வந்து பல மாதங்களாயின. எனினும்,

தங்களைத் தக்கவாற்றாற் காணவேண்டுமென்றே இதுகாறும் காத்திருந்தோம். இன்றுதான் நேரில் காணும் பாக்கியம்பெற்றேம்.' என்று மிகவும் குழைந்தசொற்களில் அன்பு ஊற்றெழ இனிமையாகக் கூறினர். கவிராயரது வணக்கமும் சாதுரியமும் உணர்ச்சியெழச்செய்யும் உருக்கமொழிகளும் இனிமையான கண்டத்தொனியும் வாசாமகோசரமாய் வசனிக்கும் வாக்கும் பரவசமெழச்செய்யும் பாடல்களும் அவையினர்க்கும் அரசரிருவருக்கும் அவர்பால் அன்பையும் அகமகிழ்வையும் அதிகரிக்கச்செய்தன. அரசரும் தேவரும் கவிராயரவர்கட்கு முகமன்கூறிச் சன்மானமுமளித்தனர்.

மாம்பழக்கவிராயர் பொன்னுச்சாமித்தேவரைக் கண்ட உண்மைச்செய்தி இவ்வாறாகச் சிலர் இதனை வேறுபடியாகவும் விளம்புகின்றனர். அது பொருந்தாது.

---

12. ஸ்ரீ ஸேதுஸம்ஸ்தாநாதிபதிகளும்—
மாம்பழக் கவிராயரும்

பண்டுதொட்டே நமது பாண்டியநாடு அறிவின்வளர்ச்சியிலும், அருந்தமிழ்ப்பணியிலும் முன்னணியில் நின்று பெருமைபெற்று விளங்கியதென்பது தமிழறிவுபெற்ற அறிஞரும், ஆராய்ச்சியாளரும் அறிந்தவொருண்மை. இந்நாட்டுப் பேரரசர்களும் சிற்றரசர்களும் ஜமீந்தார்களும் மற்றும் பிரபுக்களும் தமிழையும் தமிழ் கற்றுப் புலமைபெற்ற வல்லாரையும் நன்கு ஆதரித்துப் பாதுகாத்துவந்தனர். இவ்வாறு பாதுகாத்தவர்களுள் சேதுபதிகள் முதலில் எண்ணுதற்குரியர். சேதுஸம்ஸ்தானத்தில் அலர்மடந்தையின் அருள்பெற்ற நற்றமிழ்வாணர்களும் நல்லிசைப்புலவர்களும் இசைத்தமிழில் இன்பமுறப் பாடும் பாடகர்களும் நாடகம் பரதம் முதலியவற்றில் வல்லாரும் பின்னும் பலவகைக்கலைகளில் தேர்ந்த அறிஞர்களும் அவை சிறக்க வீற்றிருந்து சேதுபதிகளால் சிறந்த வரிசைகள் பெற்றுப் புகழுற்று விளங்கினர்.

இத்தகைய சேதுமன்னர்திருமரபில் பத்தொன்பதாம்நூற்றாண்டில் தமிழகம் முழுதும் மதிக்கும்படி விளங்கிப் பொய்யுடம்பு நீத்துப் புகழுடம்புபெற்று இன்றும் தமிழர்நினைவில் நீங்காதிருப்பவரும் ஸேதுஸம்ஸ்தானத்து ஸ்ரீமுத்துராமலிங்கசேதுபதியவர்களின் முன்பிறந்தாரும் ஸேதுஸம்ஸ்தானத்தின் தலைமை நிர்வாகியும் அதை உயர்நிலைக்குக் கொணர்ந்த பேரறிஞரும் தமிழிலும் வடமொழியிலும் புலமைவாய்ந்து சிறந்த கலாநிதியாக விளங்கியவரும் தமிழகத்தில் மகாவித்துவான்களெனப் பெயர் சிறந்து கீர்த்தியுடன் திகழ்ந்த திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துநல்லூர் ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் முதலிய புலவர்பெருமக்களுடன் நெருங்கிப்பழகி அவர்களுடைய பெரும் புலமையையும் கவிபாடும் ஆற்றலையும் அறிந்தவரும் சங்கமிருந்து தமிழாராய்ந்த மதுரைமாநகரத்தில் கி. பி. 1901-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் தேதி நான்காம் சங்கத்தையும் செந்தமிழ்க் கலாசாலையையும் தாபித்து, அவற்றை நலம்பெற வளர்த்துப் புகழ்பெற்று விளங்கி 1911-ஆம் ஆண்டில் விண்புகுந்த ஸ்ரீபாண்டித்துரைத்தேவரவர்களின் அருமைத் தந்தையாருமாகிய ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்கள், தமது பேரவையில் தமக்கு எதிரே வீற்றிருக்கும் மாம்பழப்பாவலரது அரும்பெரும் புலமையையும் விரைந்து கவி பாடுமாற்றலையும் யாவரும் கண்டறியுமாறு வெளிப்படுத்த நினைந்து அவரைநோக்கி 'அருந்தமிழ்வல்லீர்! "கிரியிற் கிரியுருகுங் கேட்டு" என்பதை ஈற்றடியாகக்கொண்டு ஒரு செய்யுளை இயற்றித்தருக' என வேண்டினர். உடனே கவிராயர்,

மாலாம்பொன் னுச்சாமி மன்னர்பிரான் றன்னாட்டிற்
சேலாங்கண் மங்கையர்வா சிக்குநல்யாழ்—நீலாம்
பரியிற் பெரியகொடும் பாலைகுளி ரும்ஆ
கிரியிற் கிரியுருகுங் கேட்டு.

என்று அதனைப் பூர்த்திசெய்தனர்.

[நீலாம்பரி, ஆகிரி என்பன இராகங்கள். கிரி—மலை.]

கவிஞன் உள்ளத்திற் கற்பனையூற்று எப்பொழுதும் பெருக்கெடுத்துக்கொண்டேயிருக்கும். இவ்வினிய ஊற்று மாம்பழக்

கவிராயரிடத்துத் தெய்வ அருளால் இனிதாக அமைந்திருந்தது. இதனால் எத்தகைய கவிகளையும் அவர் தட்டின்றி அநாயாசமாகப் பாடிவந்தனர்.

பிறகு தேவர், 'கிரியின்மயல் காட்டறிஞர் கேள்' என்ற இறுதி அடியைக்கொடுத்து, முன்போலவே கவியைப் பூர்த்திசெய்யும்படி புகன்றனர். உடனே மாம்பழப்புலவர்,

என்றுமொரு தன்மைத் தெனவினிக்கு மொன்னலரை
வென்றபொன்னுச் சாமி விறல்வேந்தே!—துன்று
வரிசிலைக்கை வேளயிலான் மாய்ந்தகிர வுஞ்ச
கிரியின்மயல் காட்டறிஞர் கேள்.

எனப் பாடிமுடித்தனர்.

மேலும், 'கனதனவே னக்கூறிற் கண்டு' என்ற ஈற்றடியைக் கொடுத்துப் பாடும்படி தேவர்கூறக் கவிராயர் உடனே,

போலுரைமட் டும்புகல்வர் பொங்குபொரு ளொன்றீயார்
சீலபொன்னுச் சாமியெனுஞ் சிங்கேறே!—சால
மனமிரக்க மில்லாத வன்கணரைத் தேடிக்
கனதனவே னக்கூறிற் கண்டு.

என்று அதனை முற்றுவித்தார்.

[கண்டுபோலுரைமட்டும் புகல்வர் எனக் கூட்டிப் பூட்டுவிற்பொருள் கோளாமாறு காண்க]

புகழ்ந்தும், இகழ்ந்தும் பாடவல்லவர் புலவர்கள். அவர்கள் செல்வர்களது எண்ணங்களை எளிதாகச் சித்திரித்துக்காட்டுகின்றனர். அவர்கள் புகழுரையும் இகழுரையும் பளிங்குபோன்றன. பளிங்கு எதிர்ப்பட்டவற்றின் வெளித்தோற்றத்தைமட்டும் காட்டும். இவை, வெளித்தோற்றத்தோடு மனத்தினுள் புதைந்துகிடக்கும் குற்றம்குறைகளையும் எடுத்துக்காட்டும் வல்லமைவாய்ந்தவை. இத்தகைய கவிவலார்களில் மாம்பழக்கவிராயரும் ஒருவரென்பதைத் தேவருணர்ந்து உண்மகிழ்ந்து அப்பாலும் அவர், 'காளையுருவழித்தோன் கண்' என்ற இறுதி அடியைச்சொல்லி அதைப் பூர்த்திசெய்யும்படி வேண்டக் கவிராயர்,

பத்திபுரி நெஞ்சே! பகலிரவும் பேரின்ப
முத்திதரு மையலிடை மூழ்காதே—சத்தியினல்
வாளை யுருவழித்த வள்ளுகிர்க்கைச் சிங்கமுகக்
காளை யுருவழித்தோன் கண்.

என்று பாடிமுடித்தனர்.

பின்னும் அவர், 'குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே!' என்ற இறுதியடியைக் கொடுத்து, முதல் மூன்றடிகளைப்பெய்து தூக்கைமுற்றுறச்செய்குதிர்'' என்றனர். உடனே,

கட்டளைக்கலித்துறை.

கடத்தைப் பழித்துக் களபந் திமிர்ந்து கதிர்த்தரள
வடத்தைத் தரித்துச் சுணங்கு படர்ந்தொளிர் வள்ளிதன
தடத்தைத் தடவுந் தனது மலர்க்கைத் தலத்தினிற்குக்
குடத்தைப் பிடித்தவன் சட்டியை நோக்கக் குறைவில்லையே.

என்று கவிராயர் அதனை முற்றுவித்தனர்.

இங்ஙனம் புலமைமிக்க ஸ்ரீ. பொன்னுச்சாமித் தேவரவர்கள் மாம்பழக்கவிராயரவர்களுடைய பேராற்றலை வெளியிட்டுக் கொண்டிருக்கையில், அரசரும் அவருடைய பின்பிறந்தாருமான ஸ்ரீமான் முத்துராமலிங்கசேதுபதிமன்னரவர்கள், இடையிற் புகுந்து, கவிராயரைப்பார்த்துப் ''புலவீர்! 'மஞ்ஞைமிடற் றுட்புகுந்த முள்ளெயிற்று வல்லரவு மகிழுந் தானே' என்ற ஈற்றடிக்கு ஏற்ற பொருள் அமைத்து இனியதொருகவிபை இயற்றித்தருக'' என்று கூறினர். புலவர் நன்றெனச்சொல்லி விரைந்து,

அஞ்ஞைகளைத் தினந்தினங்கொண் டாடிகனி
பாடிமிடி யதனுற் பல்லை
ஞெஞ்ஞையெனத் திரக்காதெற் புரக்குமுத்து
ராமலிங்க நரேந்த்ர! கேண்மோ!
கஞ்ஞையுறு சிறியர்பெரி யோரையும்வெல்
லுவர்விதியார் கடப்ப ரோர்கால்
மஞ்ஞைமிடற் றுட்புகுந்த முள்ளெயிற்று
வல்லரவு மகிழந் தானே.

என்று பாடிமுடித்தனர்.

இங்ஙனம் தொடர்ச்சியாக ஆறு ஈற்றடிகளைக்கொடுத்து ஸ்ரீ பொன்னுச்சாமித்தேவரும், ஸ்ரீ முத்துராமலிங்கசேதுபதியவர்களும் பூர்த்திசெய்யும்படி சொல்லக் கவிராயர், முதல்மூன்றடிகளையும் அவர்கள் கருதிய பொருள்நயம்பெற அமைத்துப் பாடி முடித்தனர். இங்ஙனம் பிறர்கருதியவற்றை அறிந்து செய்யுள் வடிவில் அமைத்துக் கூறுவது எளிதான காரியமா? தேர்ந்த கல்வியும் தெளிந்த ஞானமும் கூரிய மதியும் உடைய கவிகளுக்குத்தான் அது எளிதாகும். இது மாம்பழக்கவிராயரிடத்து இயல்பாயமைந்ததாகவும், தெய்வத்தினருளாலமைந்ததாகவும் இருந்தது. அத்திறமையால் மாம்பழப்பாவலர் ஈற்றடிசொல்லுமுன்னரே எஞ்சிய அடிகளைப்பெய்து வெண்பாக்களாகவும் கட்டளைக்கலித்துறையாகவும் விருத்தமாகவும் எண்ணிய கருத்துக்கள் இனிதமையும்படி பாடினர்.

[தமிழ் அன்பர்களே! அறிவுத்தெய்வமாகிய கலைமடந்தையின் ஆலயம் மிகவும் தூய்மைவாய்ந்தது. அவ்வழகிய ஆலயத்தின் உள்ளிடத்தை யாரும் எளிதில் அடைந்துவிடமுடியாது. உண்மையாகவே கலைமகணலனைக் கண்டு களிக்கவேண்டுமாயின், தெளிந்த அறிவும், குற்றமற்ற உள்ளமும் உடையவராயிருத்தல்வேண்டும். வெறும் யாப்பிலக்கணம் மட்டும் கற்றுச் சொற்களை அடுக்குதல் பயன்படாது. அறிவும் அருளும் நெஞ்சில் சுரந்து பெருக்கெடுத்த பொழுது பாடும் பாடல்களுக்கு ஒரு தனிமதிப்பும் பெருஞ்சிறப்பும் ஏற்படும். இயற்கையே புலவன் உள்ளத்தில் தவழ்ந்து நாவில் ததும்பிக் கவியாக வழியுமானால், அக்கவியின்பத்தை எவ்வாறு வருணிப்பது? உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கிலும் அவ்வொளியே பரவி வெளியாகும்.]

[தொடரும்.]

சி. கு. நாராயணசாமிமுதலியார்.

கம்பராமாயணசாரம்.

[௫௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

தான் இராமனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது தெரிந்து விபீடணன் மகிழ்தல்

[அப்போது சுக்கிரீவன், 'இராமபிரான் உனக்கு அபயதானம் அருளினன். அவனைத் தொழவா' என்ற வார்த்தை விபீடணன் காதுக்குள்ளே புகுந்தவுடனே, அவன் கண்களிலிருந்து உவகைக் கண்ணீர், வெள்ளம்போலப் புறப்பட்டது. அவன் உள்ளம் குளிர்ந்தது. அதுபோலவே உடலும் குளிர்ந்தது. உள்ளத்துள்ளே உண்டாகிய உவகை, உள்ளத்துள் அடங்காமல் (உரோமக்கால் வழியாக) வெளிப்பட்டெழுந்தாற்போல, உரோமங்கள் சிலிர்த்தன.]

23 பஞ்செனச் சிவக்கு மென்காற் றேவியைப் பிரித்த பாவி[1]
வஞ்சனுக் கிளைய வென்னை வருகவென் றருள்செய் தானே
தஞ்செனக் கருதி னானே தாழ்சடைக் கடவு ளுண்ட
நஞ்செனத் தகையே னன்றே[2] நாயக னருளி[3] னாயேன்

கொண்டுகூட்டு: பஞ்சு என்னச் சிவக்கும் மென்கால் தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கு இளைய என்னை வருக என்று அருள்செய்தானே! தஞ்சு எனக் கருதினானே! நாயேன், நாயகன் அருளின் தாழ்சடைக் கடவுள் உண்ட நஞ்சு எனத்தகையேனன்றே!

பொருள்: (பஞ்சு ஆகிய பொருள்பட்டுச் சிவத்தலைச் சொல்ல வேண்டுமோ) பஞ்சு என்று (அப்பதார்த்தத்தின் பெயராகிய பதத்தைச்) சொல்லவே, சிவந்துபோகும்படி மென்மையான காலை யுடைய சீதாதேவியைப்பிரித்த வஞ்சகப்பாதகனான இராவண னுடைய தம்பி (யானதனால் பகைக்கத்தக்கவன்) ஆன என்னை (அருளத்தக்கவனாகக்கொண்டு) "வருக" என்று அப்பெருமான் அருள்செய்தானே! (அருளிக் காக்கத்தக்க) அடைக்கலப்பொரு ளென்று (அங்கீகரிக்கக்) கருதினானே! நாய்போற் கடையேனான (நஞ்சுபோன்ற தீமையுடைய) நான் அப்பெருமானால் அங்கீகரித் தருளப்பெற்றதனால், சிவபிரான் உண்ட(தனால் தீமைநீங்கி நன்மைபொருந்திய) நஞ்சுபோல(த் தீமைநீங்கி நன்மைபொருந் தியவன்) ஆனேனன்றே!

தஞ்சம் (-அடைக்கலம்) என்பது தொகுத்தலால் தஞ்சு எனப்பட்டது. தகை - தன்மை.

'அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்—அடிக்கு நெருஞ்சிப் பழம்' என்றும், 'மாதர்பாதம் பஞ்சுபட்டாலும் பொறுது சிவக்கும்' என்றும் பெண்கள்பாதமென்மையை உயர்வுநவிற்சிகளாகக் கூறுவதுண்டு. அவ்வுயர்வுநவிற்சிகளுக்கெல்லாம் மேலான உயர்வுநவிற்சியாக, சீதைபாதம், பஞ்சு என்ற பதார்த்தம் பட்டால் சிவக்குமென்பானேன், பஞ்சு என்ற பதத்தைக் கேட்டாலுமே சிவந்துவிடுமென்பான் 'பஞ்செனச் சிவக்கு மென்கால்' என்றான். இதனில், ஊற்றுணர்ச்சிமட்டுமுடைய பாதத்தை ஓசையுணர்ச்சியுமுடையதுபோலக் கூறியிருக்கும் கவித்துவம் பாராட்டத்தக்கது.

இங்கே கம்பர், 'நெருப்பு' என்ற 'சொல்'லைச் சொல்லுதலால், நாக்கு வெந்துபோகாது, 'நெருப்பு' என்ற 'பொருளை'த் தொடுதலாற்றான் வெந்துவிடுமென்ற கருத்தடங்கிய 'நெருப்பென்றால் நாக்கு வெந்துபோமா' என்ற பழமொழியைக் கருத்துட்கொண்டு, அதனோடு அதிசயமாக முரண்படப் 'பஞ்செனச் சிவக்கும் மென்கால்' என்றா ரென்னலாம்.

'பஞ்செனச் சிவக்குமென்கால்' என்பதற்கு, '(தோழிமார்) செம்பஞ்சுக்குழம்பு (ஊட்டவேண்டும்) என்று சொன்னாலும் (அதனையும் பொறுமற்) சிவந்துபோகுந்தன்மையுள்ள மென்மையான திருவடிகள்' என்றும் பொருள்கூறலாம்.

'கொடியநஞ் சமுதாக்கொண்டாய் குற்றமுங் குணமாக்கொள்வாய்' என்றவாறு சிவன் நஞ்சை அமுதாக்கிக்கொண்டதுபோல இராமன் தீயவனான என்னை நல்லவனாக்கிக்கொண்டான் என்பதில் உள்ள உவமான உவமேயப் பொருத்தம் உவந்து கொண்டாடத்தக்கது.

பாடபேதம்: [1] பிரிவுசெய்த. [2] கருதினானே. [3] அருள.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை B.A., (LOND.) அவர்கள்.]

(ருசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கிரேக்கர் குடியேற்றங்கள்.

கி. மு. 735-ஆம் ஆண்டில் தியோக்ளிஸ் என்பவன் யவனர் சிலரொடு சிசிலிக்குச்சென்று எறிளு எரிமலைச்சாரலிற் குடியேறினன். கொறிந்தியர் சிறுக்குசாப்பட்டினத்திற் குடியேறினர்கள். கி. மு. 690ல் கிறீற்றுத்தீவார் கேலாவில் தங்கினர்கள். இக்கிரேக்கக்குடிகள் பெருகிப் பழங்குடிகளை மேற்குப்பக்கத்திற்குத் துரத்தியதன்றி வேறுபலஇடங்களிலும் குடியேறினர்கள். இவ்வண்ணம் பினீசியர்வசம் இருந்த சிசிலி கிரேக்காட்சிக்குட்பட்டது. பினீசியர்பட்டினமான அக்கிரிக்கந்தம் சிறுக்குசாப்பட்டினத்தோடு பகைகொண்டது. கி. மு. 485ல் சிறுக்குசாப்பட்டினத்தை ஆண்ட மேன்மக்களை அங்கிருந்த அடிமைகள் திரண்டு அடக்க எத்தனித்தாராக, மேன்மக்கள் கேலாநகரத்துக் கேலா என்னுங் கொடுங்கோலனிடம் துணைவேண்டினர்கள். கி. மு. 480ல் கேலா சிறுக்குசாவில் அரசுபுரிந்து பினீசியரையும் வென்றான். கேலா இறந்தபின் அவன் தம்பி ஹயிரோ வேந்தனானன். ஹயிரோ கி. மு. 474-ஆம் ஆண்டு எற்றூறியரோடு பொருதான். ஹயிரோ இறந்தபின் சிறுக்குசாப்பட்டினத்திற் குடிகள் அரசியலை நடத்தினர். பினீசியர் இக்காலத்தில் கிரேக்கரை நெருக்கினர்கள். டையோனிசியஸ் என்னும் கொடுங்கோலன் கிரேக்கநகரங்கள் எல்லாவற்றையும் ஒரு குடைக்கீழாண்டு பினீசியரோடு போர்செய்தான். அவன்பின் அவன்மகன் இரண்டாவது டையோனிசியஸ் அரசாண்டான். கி. மு. 353-ஆம் வருடமளவில் பலகலகங்களினல் அரசியல் குலையகேரிட்டது. பின்னர்க் கொறிந்தியருதவியால் சிறுக்குசாப்பட்டினத்தார் குடியரசை நாட்டினர். அக்காலத்தில் 600 அமைச்சர் கொண்ட சபை நாட்டை ஆண்டது. கி. மு. 325ல் அகதோக்கிள்ஸ்

என்னும் கொடுங்கோலன் சிருக்குசாப்பட்டினத்தில் ஆணைசெலுத்தினன். அவன் பினீசியர்வசமாயிருந்த கொக்கிராத்தீவைப் பிரஸ்வேந்தனுக்கு நன்கொடையாகக் கொடுத்தான். பிரஸ்வேந்தன் கி. மு. 287-ல் சம்நிதியரும் எற்றூறியரும் துணைவேண்டவும் மறுத்துக் காதாக்கினியரான பினீசியரோடு போர்செய்ய எத்தனித்தான். பிரஸ் தன்படையோடு சிசிலியில் இறங்கினன். சிருக்குசாப்பட்டினத்தை முற்றுகையிட்டிருந்த பினீசியர் கிரேக்கப்படையைக் கண்டு அஞ்சியோடினர்கள். சிசிலித்தீவுக் கிரேக்கர் யாவரும் பிரஸ்வேந்தனை வரவேற்றூர்கள். லிலிபேயம் என்னும் ஒரு பட்டினத்தைத்தவிர ஏனைய துறைகளெல்லாம் கிரேக்கர்வசமாயின. பினீசியர் சமாதானத்தை விரும்பினர்; சில நகரங்கள் அழுக்காறுற்றுப் பிரஸ்வேந்தனுக்கு எதிராகப் பகைத்தமையால் கி.மு.286-ல் சம்நிதியர் பிரஸ்வேந்தனுதவியைவேண்டப் பிரஸ் இத்தாலியாவுக்குத் திரும்பினன். கி. மு. 275-ல் சம்நிதியர் மிகவும் இளைத்தனர். பிரஸ் தன் மூலப்படை தொலைந்தமையால் ஒரு கூலிப்படையைச் சேர்த்து வெனீசியாநகரின்பக்கல் உரோமரோடு பொருதான். இப்போரில் உரோமருடைய வில்லாளிகள் பிரஸ்வேந்தனுடைய யானைப்படையை வென்றமையால் பிரஸ்வேந்தன் தோற்றூன். அதன்பின் சம்நிதியரும் கிரேக்கரும் உரோமரால் ஆளப்பட்டனர். பிரஸ் இத்தாலியாநாட்டைவிட்டுநீங்கித் தனதுநாட்டுக்குச் சென்று அங்கிருந்து பல கிரேக்கநாடுகளை அடக்கி ஆண்டான். பின்பு பிரஸ் ஸ்பாட்டாநாட்டுக் கோட்டையொன்றை முற்றுகையிட்டுநிற்கையில் ஸ்பாட்டாநகரப்பெண்ணொருத்தி தன்மகன் வாளால் வெட்டுண்டதைக் கண்டு பிரஸ்வேந்தனைச் செங்கல்லால் எறிந்து கொன்றூள்.

முதற் பினீசியயுத்தவரலாறு.

பினீசியர் பர்சியவிரிகுடாவிலிருந்து புறப்பட்டுச் சிரியாநாட்டுக்கரையில் கி. மு. 2000 ஆண்டுவரை குடியேறினர்கள். சிரியாநாடு பினீசியநாடாயினது. அந்நாடு 180 மைல் நீளமும் 40 மைல் அகலமுமுடையதாய்க் கிழக்கில் லபனன்மலையையும் மேற்கில் மத்தியதரைக்கடலையும் எல்லையாகவுடையதாயிருந்தது. அந்நாடு

மலையும் கடலும் வனமும் இயற்கையரண்களாயமையப்பெற்ற தாகையால் பகைவரால் நலிவெய்தாததாயிற்று. பினீசியர் பெரிய ராச்சியாதிகாரத்தை நடத்த ஆசைப்படவில்லை. வாணிகஞ்செய்து திரவியந்தேடலே பினீசியரின் நோக்கம். பினீசியமரக்கலங்கள் மத்தியதரைக்கடலெங்கும் ஓடின. இங்ஙனம் பொருளைத்தேட விழைந்த பினீசியர் தேசாந்தரங்களுக்கு வியாபாரநோக்கமாகச் சென்றனர். மத்தியதரைக்கடல்வழியாகச்செய்யும் வாணிகம் முழுவதும் பினீசியர்கையில் இருந்தது. கருங்கடலிலும் ஐபீரியா விலும் நகரங்கள் தீவுகள் எங்கும் பினீசியர் சென்று தங்கள் ஆவணங்களை அமைத்துப் பண்டமாற்றுச்செய்தனர்; சைப்பிரஸ் தீவின் செம்பையும் கிறீஸ்தேசத்துச் சாயத்தையும் சாகஸ்தீவின் பொன்னையும் லொறியாத்தீவின் வெள்ளியையும் கவர்ந்து யவன தேசமுழுவதும் ஆங்காங்கு ஆவணங்களமைத்தனர்: என்பது சரித்திரங்களாலும் அறியக்கிடக்கின்றது. உதாரணமாகச் சில கிரேக்கநாட்டுத் துறைகளின் பெயர்கள் பினீசியமொழிகளாலமைந் திருப்பது அறியற்பாலது. உற்றிக்காவில் ஒருதுறை கி. மு 1140 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பினீசியர் சாலமன்காலத்து ஜிப் ரால்டர்நீரிணையால் சென்று அட்லாண்டிக் கடலை அடைந்து ஐபீரி யாக்குடாநாட்டின் துறையாகிய காடிஸ்பட்டினத்தில் பொன் னேற்றி எருசலம் கோயிலுக்குக் கொணர்ந்தனர் என அறிகிறோம்.

பின்னர் யவனரும் பண்டமாற்றினாற் பொருள்தேடலாமென உணர்ந்து பினீசியருக்குப் பகைவராயினர். இரையர் சிடன்முதலிய பட்டினங்களில் வசித்த பினீசியர் ஆசியரின் நெருக்கத்தால் அவற்றை நீங்கி ஆபிரிக்காவில் கி. மு. 853-ஆம் ஆண்டு காதாக்கோ என்னும் புதிய பட்டினமொன்றை அமைத்தனர். காதாக்கோ என்பது கர்தாஸ் கிர்தாஸ் என விரிந்து, பினீசியமொழியில் புதிய பட்டினம் எனப் பொருள்படும்.

இக் காதாக்கோப்பட்டினத்தின் ஆதிவரலாற்றை வேசிலியஸ் வனீட்காப்பிபத்தில் இயம்பினர்.

காதாக்கோப்பட்டினம்.

இரையர்ப்பட்டினத்து வேந்தன் சிக்கியனை அவன் மைத்துனன் பிக்மாலியன் கொன்றானாக, அவன் மனைவி எலிசா என்னும் டைடோ சில செல்வரோடு புறப்பட்டுத் துயினிஸ்குடாவில் காதாக்கோநகரத்தைக் கண்டனள். இரையர் தலைநகரமாகலான் அங்குள்ள கோயில்களுக்குக் காதாக்கினியர் பொருள் அளித்தனர் என்றும் இரையரைப் பெரிய அலெச்சாந்தர் கைப்பற்றியபோது பினீசியரை வரவேற்று அவருக்குத் தம் நகரத்தில் இல்லம் அளித்தனர் என்றும் அறிகின்றோம். துயினிஸ் மிகச் செழித்த நாடாயினும், காதாக்கினியர் ஆபிரிக்கரையே கமத்தொழில்செய்யவிட்டுப் பண்டமாற்று ஒன்றினாலேயே பொருளீட்டினர். காதாக்கினியர் அட்லாந்திக் கடற்றீவுகளுக்கும் ஆபிரிக்காவின் மேற்குக்கரைத்தீவுகளுக்கும் சென்று பொன் யானைத்தந்தம் குரங்கு முதலியன கொணர்ந்தனரென்றும் பிரித்தானியதேசத்திற்குச்சென்று ஈயம் வாங்கினரென்றும் அறிகிறோம். இவ்வாறு காதாக்கினியர் பெருகி இராச்சியம்நடத்தவுந்தொடங்கினார்கள். ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியும் சாடினியா கோசிக்கா சிசிலி முதலிய தீவுகளும் காதாக்கினியர் ஆட்சிக்குட்பட்டன. சிசிலித்தீவில் காதாக்கினியர் கிரேக்கரோடு பொருதனர். உரோமர் காதாக்கினியரைப் பினீசியர் (போயினி) எனவே வழங்கினர்.

அரசியல்முறை.

காதாக்கினியர் அரசியன்முறையை யவனதேசத்துப் பெருந்தத்துவஞானி அரிஸ்தாதில் ஆராய்ந்துவரைந்தனர். வயோதிகர் கூட்டம் ஒன்றே அரசியலை நடத்திற்று. அக்கூட்டத்திற்கு 28 பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

அக்கூட்டத்தினரே போர்தொடங்குதற்கும் நிறுத்துதற்கும் உத்தரவளிக்கவேண்டும். அரசியலை இருதலைவர்மூலமாக அக்கூட்டம் நடத்திற்று. பொதுமக்களுக்கு அரசியலுரிமைகள் ஒன்றுமில்லை. பிற்காலத்தில் நூற்றுவர்சபை பிரமாணங்களையாக்கும் வல்லமையுடையதாயிற்று. அச்சபை நூற்றுநான்குபிரதிநிதிகளை

உடையது. பிரதிநிதிகளை ஐவர்குழுக்கள் (பஞ்சாயங்கள்) தெரிந்தெடுத்தன. ஐவர்சபைகள் நம் கிராமச்சங்கங்களை ஒத்தன.

பினீசியரது தெய்வவழிபாடு.

பினீசியர் ஞாயிற்றிற்கு மக்கட்பலியளித்தனர். யவனர் முற்காலத்தில் இப்பலிகொடுத்துவந்து பின்னர் அது கூடாவொழுக்கமெனக் கைவிட்டனராகையால் பினீசியர் இப்பலிகொடுத்ததைக் கண்டு அவரை வன்னெஞ்சரென இகழ்ந்தனர். பினீசியர் மலித்தா என்னுந் திங்களையும் வழிபட்டனர். மலித்தா, அஸ்டாட்டி, உரோமரது வீனஸ், யவனரது அபிரேடிற்றி என்பன ஒரு தன்மைத்தெய்வங்களே. இரையர்நகரிலும் மெல்காத்தென்னும் தெய்வம் வணங்கப்பட்டமையால் கொறிந்திநகரத்தார் வணங்கிய மெல்காத் தெய்வமும் பினீசியர்தெய்வமேயாகும்.

பினீசியரின் படைமாட்சி.

பினீசியர்செல்வத்தைக் கண்ட உரோமர் அழுக்காறுற்று அவரொடு போர்செய்யத்தொடங்கினர். பினீசியர் படையிற் சேவைபுரிதலை வெறுத்தனர். கூலிப்படையே அவர் படை. படைத்தலைவர்கள் பினீசியராகவே இருந்தனர். படைத்தலைவருக்குப் போரைத் தாம் எண்ணியவாறு நடத்தும் உரிமை அளிக்கப்பட்டதாயினும், தோல்வியடைந்தால் அவர் தண்டிக்கப்பட்டனர். சிலவேளைகளில் அவர்க்கு மரணதண்டனையும் விதிக்கப்பட்டது. பினீசியர் செல்வமிகுதியால் பலதேசத்துவீரர்களுக்கும் கூலி கொடுத்துப் பெருங்கூலிப்படைகளை வைத்திருந்தனர். கல்லியர் கம்பேனியர் யவனர் நுமிடியர் ஆபிரிக்கர் முதலியோர் பினீசியப் படையிற் சேவித்தனர். காற்றிலும் விரைந்துசெல்லும் நுமிடியர் குதிரைப்படையும் அரக்கரனைய கல்லியர் வேற்படையும் விகுரியர் கவுண்படையும் ஒப்பற்ற கூலிப்படைகளாயின. அவற்றுடன் யானைப்படையும் பழக்கப்பட்டது. தரைப்படை எவ்வளவு பெரிதாயினும் பினீசியர் தம் கப்பற்படையையே நம்பியிருந்தனர். கட்பல்களே அவருடைய காவலரண்கள். பினீசியர்கப்பற்படை எண்ணிறந்தது.

முதற் பினீசிய யுத்தம் கி. மு. 265—244.

முன்னர்க் கூறியவாறு சிசிலித்தீவின் மேற்குப்பாகத்திற் பினீசியரும் கிழக்குப்பாகத்தில் கிரேக்கரும் ஆட்சிசெய்தனர். கி. மு. 269-ஆம் ஆண்டு ஹயிரோ என்னும் இளைஞன் செங்கோல்செலுத்தினன். ஹயிரோ கேலாவின்வழிவந்தவனாகையால் சனங்கள் அவனை நேசித்தனர். ஹயிரோ மயிலாயிநகரை முற்றுகையிட்டு மமேட்டையினரை வென்றான். பினீசியரிடம் துணைபெற்றும் ஆற்றாமல் மமேட்டையினர் உரோமரிடம் துணையிரந்தார்கள். துணை செய்தல் முறையோவென மேன்மக்கட்சபையில் பெரியதோர் வாதம் நிகழ்ந்தது. ஒருசாரார் ஹயிரோ, ரேசியத்தை அடக்குதற்கு உரோமருக்கு உதவிசெய்தானாகையால் தாம் நன்றிமறந்து அவனுக்கு எதிராக எவ்வாறு போர்செய்யலாமென வினவினார்கள். ஒருசாரார் பினீசியரை மமேட்டையினர் வெறுத்தமையால் பினீசியர் ஹயிரோவுக்கு உதவிசெய்வாரென்றும் அவர்கள் கப்பற்படையை வெல்லவியலாதென்றும் போர்செய்தல் தக்கதன்றென்றும் இடித்துரைத்தனர். வேறுசிலர், இதுகாறும் உரோமர் கடல் கடந்து போர்செய்யவில்லை; இப்போது இப்புதுவழக்கத்தை என் கைக்கொள்ளவேண்டும்? என வாதித்தனர். அன்றியும், மமேட்டையினர் நம்முடைய துணைவருமல்லர்; ஆகையால் அவருக்குத் துணைபுரிதல் அவசியமன்று எனவும் உரைத்தனர். இஃதொருபுறமாக, வேறொருசாரார் மமேட்டையினருக்குத் துணைநின்று பினீசியரோடு பொராவிடின் உரோமருடைய வியாபாரம் கெட்டுவிடுமென முழங்கினர். இவ்வண்ணம் மேன்மக்கட்சபை ஒருதீர்மானமும் செய்யாதொழிந்தது. அப்பியஸ்குளோடியஸ் புல்லியஸ்பிளாக்கஸ் என்னும் இணைத்தலைவர்கள் வகுப்புச்சபையினரிடம் போர்செய்தற்கு அனுமதிபெற்றார்கள்.

'கி. மு. 265-ஆம் ஆண்டு குளோடியஸ் சிசிலித்தீவில் இறங்க முயன்றான். மெசினநகரத்தோர் பினீசியர்படைத்தலைவன் ஹன்னோவை நகருள் வரவேற்றனர். குளோடியஸ் மெசினநகருட்புகுந்து ஒரு கூட்டம் நடத்தி ஹன்னோவை ஏமாற்றி வரவழைத்துப் படையோடு நகரைவிட்டுநீங்கும்படி வெருட்டினன். ஹன்னோ தன்

உயிர்க்கு மோசம் நேரிடுமென எண்ணி அதற்கு உடன்பட்டான். காதாக்கினியர் இக்குற்றத்திற்காக ஹன்னோவைக்கொன்றனர்' என இலிவியஸ் என்பார் எழுதியிருக்கின்றனர். இது நிற்க. வேறொரு ஹன்னோவும் ஹயிரோவும் சேர்ந்து மசினுவைச் சூழ்ந்தார்கள். அப்போது அப்பியஸ்குளோடியஸ் பினீசியரைத் துரத்தினான். கி. மு. 263-ல் ஒட்டாக்கிலியஸ் கிராசுசும், வலேறியஸ் என்போனும் 40,000 படையோடு சிறுக்குசாப்பட்டினத்திற்குச் சென்றனர். ஹயிரோ நடுநடுங்கி உரோமரோடு உடன்படிக்கை செய்துகொண்டான். அன்றுதொட்டு ஹயிரோ உரோமரோடு நட்பாகிச் சாகுந்துணையும் உரோமர்துணைவனானான். கி. மு. 262-ல் பினீசியர் ஹன்னோவின்தலைமையில் ஒருபடையைச் சாடினித்தீவுக்கும் ஹனிபாலின்தலைமையில் ஒரு படையைச் சிசிலித்தீவுக்கும் அனுப்பினார்கள். உரோமர் அக்கிரிக்கந்தத்தைத் தாக்க எண்ணினர். ஹன்னோ நகரைக் காத்தற்கு 50,000 படையோடு வந்து தோல்வியுற்று முதுகிட்டான். உரோமர் நகரையழித்து 25,000 சனங்களை அடிமைகளாக விற்றனர். ஹனிபால் உதவிசெய்யாமல் விட்டான் சிசிலிமுழுவதும் உரோமர்வசமாயிற்று. பினீசியக் கடல்வீரர் இடையிடையே சிசிலித்துறைகளில் தோன்றிக் கொள்ளைகொண்டனர்

உரோமர் கப்பற்படை.

துறைமுகங்களைக் காத்தற்காக உரோமரும் நாவாய்களைக் கட்டினார்கள். உரோமர் முதலில் நாவாய்களைக் கட்டத்தெரியா வர்களாயிருந்தனரென்றும், பின் கரைமீதுமோதி உடைந்த பினீசியக்கப்பல் ஒன்றைப் பார்த்தே தாமும் கப்பல்கட்டப் பழகினார்களென்றும், பழகினவுடன் 120 நாவாய்களைக் கட்டி கடல்வீரரைப் பழக்கினார்களென்றும் இலிவியின்வரலாறு கூறு நிற்கும். இவ்வரலாறு நம்பத்தக்கதன்று. எங்ஙனமாயினு உரோமரும் கிரேக்கரும் எற்றூறியரிடமே கப்பல்கட்டப்பழகி ரென்பது வெளிப்படை. உரோமர் பினீசியரோடு கடற்போருக்கு துணிந்தது வியக்கத்தக்கது. பண்டைக்காலத்தில் விரைந் பாய்களை விரித்தும் வலித்தும் மாற்றியும் கப்பலைத் திருப்பமு யாமையால் வலிந்து கப்பல்களைச் செலுத்திப் போர்புரிந்

வந்தனர். கப்பலோடு கப்பலை மோதியும் முன்னணியால் இடித்தும் கப்பல்களைக் கவிழ்த்தலே போர்முறையாயினும், உரோமர் புதிய முறையொன்றை ஆண்டனரென்று தெரிகிறது. அது, தம் கப்பலிலிருந்து பகைவர்கப்பல்களுக்கு ஏணிகள் முதலியவற்றின் வழியாகச்சென்று கப்பலின் மேல்தட்டிலிருந்து வாட்போர் புரிதலே. கி. மு. 261-ல் கோணிலியஸ் ஸ்கிப்பியோவின் கப்பற்படை தோற்றது. கி. மு. 260-ல் தூயிலியஸ் (Duellius) (உரோமர் கடல் வீரன்) மயிலாயிக்கடலில் ஹனிபாலை எதிர்த்துப் புதியமுறையால் போர்செய்து வென்றான். பினீசியரது 136 கப்பலில் 50 கப்பல்கள் உடைந்தன. மேன்மக்கள் தூயிலியஸ் என்னும் தலைவனுக்கு வெற்றிவிழாநடத்துமாறு உத்தரவளித்தார்கள். வெற்றிவிழாவில் தலைவர் தம் வெற்றியை மக்கள் நினைவுகூர்தற்கு ஊர்வலம் வருதல் வழக்கம். இவ்வாறு வெற்றியடைந்த உரோமர் எதிரிகளின் உடைந்த கப்பலின் முன்னணிகளை ஒரு தூணில் அமைத்தார்கள்.

ஹமில்கார் என்னும் பினீஸியர்தலைவன் திறப்பானத் துறையை மதிலாலும் பொறியாலும் காவற்படுத்தினான். அத் துறையை ஹனிபாலும் 350 கப்பல்களோடு காவல்புரிந்தான். உரோமர்தலைவன் அற்றிலியஸ் இரகூலஸ் 150,000 கடல்வீரரை 330 கப்பல்களில் ஏற்றிச்சென்று ஹனிபாலோடு தகோராக்கிளியாக் கரையையடுத்துப் பொருதுவென்றான். இரகூலஸ் ஆபிரிக்காவில் இறங்கி 25,000 வீரரை உரோமர்தலைவன் வல்சோனுவின் தலைமையின்கீழ் உரோமநகருக்குத் திருப்பியனுப்பினான். 150,000 காலாட்படையோடும் 500 குதிரைப்படையோடும் 40 கப்பல்களோடும் இரகூலஸ் பினீசியரை அடக்கமுயன்றான். பினீசியர் சாந்திப்பஸ் என்னும் கிரேக்கனைப் படைத்தலைவனாக்கினார்கள். சாந்திப்பஸ் 12,000 காலாட்படையும் 4,000 குதிரைப்படையும் 100 யானைப்படையும் சேர்த்து உரோமரைவென்று தலைவன் இரகூலஸைச் சிறையிட்டான். இச்செய்தியைப்பற்றி ஒரு பழங் கதையுண்டு. பினீசியர் இரகூலஸை ஐந்துவருடம் சென்றபின் உரோமாபுரிக்கு அனுப்பிச் சமாதானம்வேண்டினரென்றும் அவன் உரோமரைப் போர்தொடரும்படிதூண்டித் தன் சொற் றிறம்பாமற்காத்தற்குக் காதாக்பட்டினத்திற்குத் திரும்பினான்

என்றுஞ் சமாதானமாகாமையால் பினீசியர் இரகூலஸைச் சிலுவையி லறைந்தோ நீரில் ஆழ்த்தியோ கொன்றனரென்றும் கட்டுரைகள் கூறுகின்றன. இக்கட்டுரையை இலிவியஸ் எழுதியுள்ளார். வரலாற்றாசிரியர் பொலிபியஸ் இதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை; ஆகையால் இக்கதை பொய்யென்பதில் ஐயமில்லை. இரகூலஸின் மனைவி, ஹமில்கார் பொஸ்தார் என்னும் பினீசியர் இருவரை ஒரு சிறுமாடத்தில் அடைத்து உணவுகொடாது வருத்தினள் என்றும், பொஸ்தார் இறந்தபின்னும் பிணத்தை மிகவும் அவமதித்தன ளென்றும் அடிமைகள்சிலர் அச்செய்தியை அரசாங்கத்தாருக்கு அறிவித்தார்களென்றும் அறிகிறோமாகையால் இக்கொடூரச் செயலை மறைத்தற்காகப் பினீசியர் இரகூலஸை வருத்தினார்க ளெனக் கட்டுரை வரையப்பட்டது.

கி. மு. 254-ல் உரோமர் 230 கப்பல்களால் பனாருமம் என்னும் பட்டினத்தைக் கைப்பற்றி 13,000 அடிமைகளை நகருக்குக் கொண்டுவந்தனர். கி. மு. 253-ல் இணைத்தலைவர் சேவியஸ் காவிப்பியோ, செம்பிரோனியஸ் பிளிசோ என்போர் 250 கப்பலோடு ஆபிரிக்காவுக்குப் புறப்பட்டுக் கடலின் பெருக்கையும் வற்றையும் பார்த்துத் துணுக்குற்றுத் திரும்பினார்கள். கி. மு. 251-ல் உரோமர்தலைவன் மெற்றூலஸ் பகைவருடைய யானைப் படையைக் கலக்கிப் பகைவர்தலைவன் கஸ்துருபாலை வென்று 20,000 பினீசியரை வென்றான். அடுத்த ஆண்டு பினீசியர் லில்லி பேயம்நகரைச் சூழ்ந்தனர். அந்நகரைக் குளேடியஸ்புல்கர் என்னும் உரோமர்தலைவன் அணுகினான். நிமித்தம்பார்த்தபொழுது குருவிகள் உண்ணாமையால் நிமித்திகன் துர்நிமித்தமெனக்கூறினான். புல்கர் அக்குருவிகளை கடலில்வீசும்படி கூறினான். தலைவன் புல்கர் தோல்வியடைந்தான். அதன்பின் உரோமர் கப்பல்கட்டவில்லை. கடற்போரில் உரோமர் பெரும்பாலும் தோற்றனர் எனத் துணியலாம். கி. மு. 247-ல் ஹமில்கார் பார்கா என்னும் பினீசியப்பெருந்தலைவன் தோன்றினான். பார்கா என்பது

மின்னல் எனப் பொருள்படும். ஹமில்கார் உரோமருடன் எதிர்த்துப் போராடினன். கி. மு. 244-ஆம் ஆண்டில் ஆபிரிக்கர் அரசபக்தி குறைந்து தம்மை ஆண்ட பினீசியரோடு விரோதித்தமையால் உள்நாட்டுப்பகைவரை அடக்குதலில் பினீசியர் கவனம்செலுத்தினர்கள். கி. மு. 242-ஆம் ஆண்டில் உரோமர்தலைவன் கற்றுலஸ் கன்னேவை வென்றான். இதனுடன் முதல்போர் முடிந்தது. பினீசியர் சிசிலித்தீவைவிட்டுநீங்கவும் உரோமருக்கு 2,200 பொன் கொடுக்கவும் உடன்பட்டார்கள். இப்போரில் 56,000 பினீசியர் மாண்டார்கள்.

ஹமில்காரின் தனித்தலைமை.

கூலிபெருமையால் பினீசியருடைய கூலிப்படை பகைப்படையாகமாறிக் காதாக்பட்டினத்தைச் சூழ்ந்தது. உற்றிக்காநகரத்தார் காதாக்பட்டினத்தாருக்குத் துணைபுரிந்தனர். உடனே கூலிப்படை உற்றிக்காநகரையும் சூழ்ந்தது. பினீசியர் உள்நாட்டுக் கலகத்தையும், கூலிப்படையையும் அடக்க இயலாது கலங்கினர். பின்னர் ஹமில்கார்பார்காவை நகரத்தலைவனக்கினர்கள். ஹமில்கார் பகைவரை வேரோடு அழித்தான். கூலிப்படை நகரவாசிகளைத் துன்புறுத்திப் பல இடும்பைசெய்தமையால் ஹமில்கார் இரக்கம் காட்டாமல் பகைப்படைமுழுவதையும் அழித்தான். கி. மு. 238-ல் நாற்பதினயிரம் கூலிவீரர் மாண்டனர். ஹமில்கார் செங்கோல்செலுத்திப் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினன். சாடினித்தீவிலுள்ள கூலிப்படையும் பினீசியரோடு பகைத்தது. தீவிலிருந்த குடிகள் உரோமரிடம் முறையிட்டனர். உரோமர் உடன்படிக்கையைப் பொருட்படுத்தாமல் சாடினித்தீவைத் தம் ஆட்சிக்குட்படுத்தினர். ஹமில்கார் உள்வேர்த்துத் தருணம்பார்த்திருந்தான். ஒன்பதுவயதுச்சிறுவனகிய தன்மகன் ஹனிபாலை அழைத்து உரோமரோடு ஒருபோதும் நட்பாகக்கூடாதென்று உறுதிமொழி பெற்றான்.

[தொடரும்.]

பாஸமஹாகவி இயற்றிய

பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்.

முன்னுரை.

முதலில் பைசாசபாஷையில் குணாட்டியர் என்ற மஹாகவி ஏழு அரசர் சரிதங்களைத் தொகுத்தியற்றியிருந்தார். அவருள் ஆறு அரசர் சரிதங்கள் சிலகாரணங்களால் தீக்கிரையாகியொழிய, எஞ்சியது நரவாணதத்தன் (உதயனன்புதல்வன்) கதையே. அதை முதனூலாகக்கொண்டு (கி. பி. 100—150-ல்) பாஸமஹாகவி இதை யியற்றியிருக்கலாமென்று தோன்றுகிறது.

இதன் இலக்கணம்.

இது, தசரூபகங்களில் நாடிகை எனப் பெயர்கொண்டது. தேசரூபகம் என்கிற அலங்காரநூலில் இதன் இலக்கணம் பின் வருமாறு கூறப்பெற்றிருக்கிறது.

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌾𑌯 𑌚𑌤𑍁𑌰𑌂𑌕𑌾𑌦𑌿 𑌭𑍇𑌦𑌕𑌂 𑌯𑌦𑌿𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌕𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌕𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑌿 𑌭𑍇𑌦𑍇𑌨𑌾𑌨𑌂𑌤𑌰𑌰𑍂𑌪𑌤𑌾 ॥

𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌤𑍁—

𑌦𑍇𑌵𑍀 𑌤𑌤𑍍𑌰 𑌭𑌵𑍇𑌜𑍍𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾 𑌪𑍍𑌰𑌗𑌲𑍍𑌭𑌾 𑌨𑍃𑌪𑌵𑌂𑌶𑌜𑌾 ।
𑌗𑌂𑌭𑍀𑌰𑌾 𑌮𑌾𑌨𑌿𑌨𑍀 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌶𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑍃𑌸𑌂𑌗𑌮𑌃 ॥

𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌤𑍁—

𑌨𑌾𑌯𑌿𑌕𑌾 𑌤𑌾𑌦𑍃𑌶𑍀 𑌮𑍁𑌗𑍍𑌧𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌚𑌾𑌤𑌿𑌮𑌨𑍋𑌹𑌰𑌾 ।
𑌅𑌂𑌤𑌃𑌪𑍁𑌰𑌾𑌦𑌿𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌾𑌦𑌾𑌸𑌨𑍍𑌨𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑍈𑌃 ॥
𑌅𑌨𑍁𑌰𑌾𑌗𑍋 𑌨𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑍋 𑌨𑍇𑌤𑍁𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌯𑌥𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 ।
𑌨𑍇𑌤𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍇𑌤 𑌦𑍇𑌵𑍀𑌤𑍍𑌰𑌾𑌸𑍇𑌨 𑌶𑌂𑌕𑌿𑌤𑌃 ॥
𑌕𑍈𑌶𑌿𑌕𑍍𑌯𑌂𑌗𑍈𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌶𑍍𑌚 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂𑌕𑍈𑌰𑌿𑌵 𑌨𑌾𑌟𑌿𑌕𑌾 ॥

பெரும்பாலும் ஸ்த்ரீபாத்திரங்கள் நிறைந்ததாயும் நான்கு அங்கங்களுடையதாயும் இருத்தல்வேண்டும். (ஒன்று இரண்டு மூன்று அங்கங்கள் கொண்டதான வேறுவகுப்பும் உண்டு.)

விசேஷமாகத் தேவியானவள், பெரியவளாயும் அரசவம்சத்திற் பிறந்தவளாயும் ஆழ்ந்த மனமுள்ளவளாயும் சினமுடையவளாயும் இருக்கவேண்டும். அவளுதவியால் நாயகன் அரிதின் முயன்று நாயகியைக் கூடவேண்டும்.

அடையவேண்டிய நாயகியோ, அரசவம்சத்திற் பிறந்தவளும் மிகவும் அழகுவாய்ந்தவளுமாயிருக்கவேண்டும். அந்தப்புரத்தில் இசைபயிலும்பொருட்டுத் தன் அருகில் நெருங்கியவளான நாயகியிடம்,தேவியின்சினத்துக்கு அஞ்சியநிலையில் நாயகன் மேன்மேலும் காதல்கொள்ளவேண்டும். கைசிகிவிருத்தியுடன்கூடிய நான்கு அங்கங்கள் உடையதாயிருக்கவேண்டும்.

இந்தக் கிரந்தத்தில் பிரதானநாயகனுன வத்ஸராஜன் நாயகியான வாஸவதத்தைக்கு அந்தப்புரத்தில் வீணைகற்பிக்கும்படி நேர்ந்ததில் வாஸவதத்தையின் தாயான தேவியின் தடைக்கு அஞ்சியநிலையில் அவருள் ஒருவர்மேல் ஒருவர் காதல்கூரக் கந்தருவ மணம் நிகழ்ந்ததைக் காணலாம்.

கதைச்சுருக்கம்.

'யானைவேட்டையாடுவதில் விருப்பமிகுதியால், வத்ஸராஜன் யானைக்காட்டுக்குச் சென்றிருந்தான். அவனைத் தம் நகருக்குக் கொண்டுபோகவிரும்பின பிரத்யோதனன்கட்டளைப்படி அவனுடைய அமைச்சன் ஸாலங்காயனனுல் அங்கே ஒரு பொய்யானை நிறுத்தப்பட்டிருந்தது. அதை மெய்யானை என்று நினைத்து வத்ஸராஜன் வீணையின்கானத்தால் அதை வசப்படுத்தமுயன்றுகொண்டிருக்கையில் அங்கே கபடமாய் மறைந்துகொண்டிருந்தவர்களான

படையாட்களால் திடீரென்று சூழப்பட்டான். வலியவனுயினும், ஒருவனுயிருந்தபடியால், வத்ஸராஜன் பகைவர் பலரால் பிணிக்கப்பட்டுப் பிறகு ஸாலங்காயனனுல் விடுவிக்கப்பெற்றுப் பிரத்யோதனனிடம் ஒப்புவிக்கப்பெற்முன். பிரத்யோதனனும் வத்ஸராஜனுடைய "கோஷவதி" என்னும் சிறந்த யாழைத் தன்மகளுக்குக் கொடுத்து அவனை அந்தப்புரத்திற் சிறைப்படுத்தினுன்.

வாஸவதத்தையும் வத்ஸராஜனும் ஒருவரையொருவர் கண்டு காதல்கூர்ந்து காந்தர்வவிவாகம் செய்துகொண்டு அந்தப்புரத்திலேயே இன்பத்தை அநுபவித்துக்கொண்டிருந்தார்கள்.

இது இவ்வாறிருக்க, வத்ஸராஜனுடைய அமைச்சனுன யௌகந்தராயணன், ஒற்றர்மூலம் இச்செய்தி அறிந்து வருத்தமுற்று, எவ்வாறேனும் தம்முடைய அரசனையும் வாஸவதத்தையையும் தம் நகருக்கு அழைத்துவரவேண்டுமென்றும் வீணையையும் கொணரவேண்டுமென்றும் உறுதிகொண்டு, மறைவாய்நடப்பவர்களும் உண்மையுள்ளவர்களும் காரியத்தை நிறைவேற்றத்தகுந்தவர்களுமான தன் ஆட்களால், பிரத்யோதனன் அந்தப்புரம்மட்டுமன்றி அவனுடைய பட்டினம்முழுவதையும் நிரப்பிவிட்டுத் தானும் பித்தன்வேஷம்பூண்டு உஜ்ஜயிநீநகரத்தில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தான். அவன் தான் குறிப்பிடும்பொழுது படைகளுடன் அங்கே வந்துசேரும்படி முன்னமே தன் ஆட்களுக்குச் செய்தியனுப்பிவிட்டு, ஒருநாள் சிறையிலிருந்து வத்ஸராஜனைமீட்டு, ஒரு பிடியின்மீது அவனையும் வாஸவதத்தையையும் ஏறச்செய்து ஒருவருக்கும் தெரியாமல் அந்நகருக்கு வெளியே அனுப்பினுன். அது தெரிந்து பிரத்யோதனன் போர்தொடங்கியதில், யௌகந்தராயணன் தோல்வியடைந்து சிறைப்பட்டான்.

பிறகு யௌகந்தராயணனுடைய நீதியையும் புத்திநுட்பத்தையும் வல்லமையையும் கண்டு வியப்புற்ற பிரத்யோதனன் தன்

புதல்வி தக்க கணவனையடைந்தமையால் மிகவும் மகிழ்ச்சியுற்று வெகுமதிகளுடன் அவனைக் கௌசாம்பி நகரத்துக்கு அனுப்பினான்' என்பது கதைச்சுருக்கம். யௌகந்தராயணனுடைய நுண்ணறிவு முதலியன வத்ஸராஜனால்,

𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌕𑍈𑌶𑍍𑌚 𑌯𑍁𑌦𑍍𑌧𑍈𑌶𑍍𑌚 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑍈𑌶𑍍𑌚 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑍈𑌃 ।
𑌭𑌵𑌦𑍍𑌯𑌤𑍍𑌨𑍈𑌃 𑌖𑌲𑍁 𑌵𑌯𑌂 𑌮𑌜𑍍𑌜𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌃 ॥

(ஸ்வப்நவாஸவதத்தம். அங்கம். 6. சுலோ. 18.)

இதன்பொருள்:—'(யௌகந்தராயண அமைச்சரே!) பொய்ப் பித்தன்வேஷம்பூண்டதாலும், போர்களாலும், சாஸ்திரங்களில் உரைத்திருக்கிறவைகளான ஆலோசனைகளாலும், மற்றுமுள்ள உமது முயற்சிகளாலுமே அமிழ்ந்துபோனவர்களான நாம் மேலே எழுப்பிவிடப்பெற்றோம்.'

என்று கொண்டாடப்பட்டுள்ளன.

V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.
மதுரை.

பாத்திரங்கள்.

(ஆடவர்.)

வத்ஸராஜன்	கௌசாம்பிநகரத்தரசனான உதயனன்.
யௌகந்தராயணன்	உதயனனுடைய அமைச்சன்.
உன்மத்தகன்	யௌகந்தராயணன் பித்தன்வேடங்கொண்ட போது பூண்டபெயர்.
சிரமணகன்	உதயனனமைச்சருள் ஒருவன், துறவிவேஷங் கொண்டபோது பூண்டிருந்தபெயர்.
வஸந்தகன்	விதூஷகன்; உதயனனுடைய விளையாட்டுத் தோழன்.
ஹம்ஸகன்	உதயனனுடைய ஆசிரியன்.
பிராமணன்	யௌகந்தராயணன்கட்டளையால் மறைவா யிருந்த வேலையாள்.
ஸாலகன்	யௌகந்தராயணன் வேலையாள்.
நிர்முண்டகன்	யௌகந்தராயணன்வீட்டு வாயில்காவலன்.
காத்ரஸேவகன் (உடல்பிடிப் போன்)	யௌகந்தராயணனுடைய வேலையாளும் வாஸவ தத்தையின் மாளிகையில் மறைந்திருந்தவனு மான ஒரு யானைப்பாகன்.
மஹாஸேநன்	உஜ்ஜயினிவேந்தனும் வாஸவதத்தையின் தந்தையுமான பிரத்யோதநன்.
ஸாலங்காயனன் பரதரோகன்	மஹாஸேநனுடைய அமைச்சர்.
பாதராயணன்	மஹாஸேநனுடைய கஞ்சுகி.
படன்	வாஸவதத்தையின் வேலையாள்.

(பெண்டிர்.)

அங்காரவதி	மஹாஸேநன் பட்டமஹிஷி.
வாஸவதத்தை	மஹாஸேநன் புதல்வி.
விஜயை	யௌகந்தராயணன்வீட்டு வேலைக்காரி.

பிரதிஜ்ஞா யௌகந்தராயணம்.

(ஸ்தாபனை)

ஸூத்திரதாரன்:—(நாந்தியின் இறுதியில் அரங்கிற் புகுந்து)

*𑌪𑌾𑌤𑍁 𑌵𑌾𑌸𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌯𑍋 𑌮𑌹𑌾𑌸𑍇𑌨𑍋𑌽𑌤𑌿𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।

𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌸 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑍌𑌗𑌨𑍍𑌧𑌰𑌾𑌯𑌣𑌃 ॥

தேவேந்திரனுக்கு நன்மைசெய்தவனும், பெரியசைனியத்தை யுடையவனும், மிக்க வலிமையுள்ளவனும், வத்ஸராஜனெனப் பெயர்பெற்றவனும், யௌகந்தராயணன் என்ற அமைச்சனுடைய பேருதவியையும் வலிமையையும் பெற்றவனுமான மகாராஜன் (நம்மைக்) காக்க. [சற்று நடந்து திரைப்பக்கம் நோக்கி]

அம்மா! இங்கே சற்று (வரவேண்டும்).

நடீ:—(அரங்கிற் புகுந்து) ஐய! இதோ இருக்கிறேன்.

ஸூத்ர:—அம்ம! ஏதேனும் ஒரு பொருளைக் குறிக்கொண்டு பாடவேண்டும். உமது கானத்தால் சபையோர்கள் களிப்படையும் போது, நாம் கதையைத் தொடங்குவோம். அம்ம! எதைக்குறித்துச் சிந்திக்கிறீர்கள்? என்ன? பாடப்படுகிறதா?

நடீ:—ஐய! நமது ஞாதிகுலத்துக்கு நோய்கண்டிருப்பதுபோல் நான் கனவுகண்டேன். ஆகையால் அவர்கள் க்ஷேமசமாசாரத்தை அறிந்துவர ஒரு தூதனை அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸூத்ர:—நல்லது.

𑌪𑍂𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌤𑌦𑍍𑌧𑌿𑌤𑍋𑌦𑍍𑌯𑌤𑌮𑍍 ।

நம்முடைய நன்மையைக் கருதுகிறவனையும் திறமைவாய்ந்தவனையும் உள்ள ஒருவனை அனுப்புவேன்.

(திரைக்குள்) ஸாலக! நீ ஆயத்தமாயிருக்கிறாயா?

ஸூத்ர:—𑌪𑍂𑌰𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌤𑍍𑌯𑍇𑌷 𑌯𑌥𑌾 𑌯𑍌𑌗𑌨𑍍𑌧𑌰𑌾𑌯𑌣𑌃 ॥

இந்த யௌகந்தராயணன் எவ்வாறு ஒருபுருஷனை அனுப்புகிறானோ (அவ்வாறே நானும் அனுப்புவேன்.)

(இருவரும் வெளிச்செலல்.)

(ஸ்தாபனை முற்றிற்று.)

[தொடரும்.]

---

* இந்த நாடிகையில் கதாநாயகனான வத்ஸராஜன், கதாநாயகியான வாஸவதத்தை, அமைச்சன் யௌகந்தராயணன், ஆகிய முக்கிய பாத்திரங்களின் பெயர்களை இந்த நாந்தியிலே சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது.

மதிப்புரை.

[மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். ப்ரும்மஸ்ரீ.

உ. வே. சாமிநாதையரவர்கள் எழுதுவது.]

சங்ககாலத்துச் சேரமன்னர்கள்.

தமிழ்நாட்டை மிகப் பழங்காலந்தொட்டு ஆண்டுவந்த முடி மன்னர்கள் சேர சோழ பாண்டியர்களாவர். இலக்கியங்களிலும் சாஸனங்களிலும் உள்ள குறிப்புக்களால் இம்மூவகையினர் சரித்திர வாலாறுகளும் அறியப்படுகின்றன. சோழபாண்டியர்களைப்பற்றித் தெரிவிக்கும் நூல்கள் பல ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ளன. ஆயினும், சேரவரசர்களைப்பற்றிய ஆராய்ச்சியோ சிறிய அளவிலே தான் இருக்கிறது. அவர்களுடைய சரித்திரத்தைத் தனியே விரி வாகக்கூறும் நூல் இதுகாறும் எழுதப்படவில்லை. இதற்குக் காரணம் மற்ற இரண்டுமரபினர்களைப்பற்றி அறிவதற்குப் பல சாதனங்கள் இருப்பதுபோலச் சேரர்மரபுபற்றியறிவதற்கு இல்லை யென்பது ஒருசார் உண்மையாயினும், கிடைக்கக்கூடிய சாதனங் களைக்கொண்டு தெரிந்தவளவில் இதுவரையில் எழுதப்படாதது ஒரு குறையே. இதனைச் சமீபத்தில், திருவாங்கூர்ஸம்ஸ்தானத் தில் உயர்தரநீதிபதியாக இருந்த ஸ்ரீமான். கே. ஜீ. சேஷையரவர் கள் நீக்கிவிட்டார்கள்.

அவர்கள் எழுதிய 'சங்ககாலத்துச்சேரவரசர்கள்' என்னும் ஆங்கிலப்புத்தகத்தைச் சிறிதுசிறிதாகப் படிக்கச்செய்து, அதி லுள்ள நுண்பொருள்களைக் கேட்டறிந்தபோது எனக்கு ஒரு தனி மகிழ்ச்சி உண்டாயிற்று. பதிற்றுப்பத்தென்னும் நூலை நான் வெளியிட்டகாலத்தில் அதன்பாற்கண்ட செய்திகள் சேரர்வரலாற் றையறியத் துணைபுரியுமென்றும், அவ்வரலாறு ஆராய்ச்சியாள ரால் எழுதப்படுமென்றும் எதிர்பார்த்தேன். பலநாட்களாக நான்

கருதியவாறு அவ்வரலாறு எழுதப்படவில்லை. இப்பொழுது இப்புத்தகம் என்னுடைய உள்ளத்தே இருந்த விருப்பத்தை நிறைவேறச்செய்தபோது நான் எப்படி மகிழ்ச்சியடையாமலிருக்க முடியும்?

ஸ்ரீ சேஷையரவர்கள் தமிழ்ப்பற்று மிகவுடையவர்கள். ஆராய்ந்து ஆராய்ந்து அவர்கள் எழுதிய கட்டுரைகள் பல. தமிழாராய்ச்சியில் அவர்கள் பலவகையில் ஈடுபட்டுள்ளவர்களென்பதற்கு இப்புத்தகமே சாட்சியாகும். சேரருக்குரிய மலைநாட்டில் அவர்கள் பலகாலமாக இருந்து அங்கேயுள்ள பழங்காலச் சின்னங்களையும் பழைய மரபுகளையும் அறிந்தவர்கள். அங்கங்கே வழங்கும் பழைய வரலாறுகளையும் ஊர்கள் முதலியவற்றைப்பற்றிய செய்திகளையும் கேட்டுத் தெரிந்துகொண்டவர்கள். பதிற்றுப்பத்து, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களிற் கண்ட செய்திகளை நன்றாக ஆராய்ந்து தம்முடைய அநுபவத்தால் அறிந்தவற்றையும் பொருத்தி இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார்களென்று தெரிகின்றது.

தமிழ்நாட்டுச்சரித்திரத்தில் அன்புடையவர்களுக்கு இப்புத்தகம் பெருமகிழ்ச்சியை அளிக்குமென்பதிற் சந்தேகமேயில்லை. நெடுங்காலமாகத் தம்முடைய ஆராய்ச்சியிற் கனிந்துள்ள பயன்களை ஐயரவர்கள் இதைப்போல ஒவ்வொன்றாக வெளியிட்டால் தமிழுலகுக்குப் பேருபகாரமாக இருக்கும். அதற்கேற்ற உடல் வன்மையையும் பிறநலங்களையும் அவர்களுக்கு அளித்தருளும் வண்ணம் ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

அங்கம் - III.

களம் – 5.

இடம்:—சாணக்கியர்குடிசை.

பாத்திரங்கள்:—மாணவர்கள், வித்துவான்கள்.

[நியாயவகுப்புப்பாடங்கள் நடக்கின்றன.]

ஆசிரியர்:—

𑌅𑌦𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌨𑍍 𑌦𑌣𑍍𑌡𑌯𑌨𑍍 𑌰𑌾𑌜𑌾 𑌦𑌣𑍍𑌡𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌪𑍍𑌯𑌦𑌣𑍍𑌡𑌯𑌨𑍍।
𑌅𑌯𑌶𑍋𑌮𑌹𑌦𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑌰𑌕𑌂𑌚𑍈𑌵𑌗𑌚𑍍𑌛𑌤𑌿॥

இது ராஜதர்மத்தில் முக்கியமானது. குற்றஞ்செய்தவர்களைத் தண்டிக்கவேண்டியது மிகவும் அவசியம். அவ்விதம் தண்டியாவிட்டால் உலகத்திற் குற்றம் மலிந்து பொல்லார் மிகுந்து நல்லோர் நலிவடைவர். ஆனல் அபராதம் செய்யாதவர்களை எவ்விதத்திலும் ஒறுத்தல் மஹாபாபமாகும். ஆதலால், குற்றத்தைத் தீரவிசாரித்து அதன் உண்மை நிரூபிக்கப்பெற்றபிறகுதான் தண்டிக்கவேண்டும். அரசனுக்கு இம்மையிற் பழியும் மறுமையில் நரகமும் நிரபராதிகளைத் தண்டித்தலால் உண்டாகும்.—என்றுசொல்லி, அபராதிகளைத் தண்டியாமல்விட்டாலுங்கூட இவைகள் உண்டாம் என்று "ச"காரத்தாற் சூசிப்பித்தார்.

[தர்க்கவகுப்பு ஆசிரியர் வெளியே சென்றிருக்க மாணவர்களுக்குள் பேச்சு.]

முதல்மாணவன்:— அப்பாக்குட்டிரயம் ஸாதுஃ

2-ஆவது மாணவன்:— அதெப்படி?

முதல்மாணவன்:—குட்டித்வாத்; பூனைக்குட்டிவத்.

3-ஆவது மாணவன்:—பாம்புக்குட்டி ஸாதுவோ?

முதல்மாணவன்:-பாம்புக்குட்டியில் அதிவ்யாப்தி. தத்பின்னத்வம் விசேஷணம்.

ஆசிரியர்:—அடே! என்னடா அரட்டை. [என்று சொல்லிக் கொண்டுவருதல்.]

[தர்மசீலர் வருதல்.]

வாயிலிலிருக்கும் ஒரு வித்வான்:—மங்களானிபவந்து. வரவேணும்.

தர்மசீலர்:—குரு இருக்கிறுரோ?

வித்வான்:—உள்ளே க்ரந்தம் பார்த்துக்கொண்டிருக்கிறுர்; போகலாமே.

[தர்மசீலர் உள்ளே மற்றொருபுறம் சென்று சாணக்கியரை வணங்கல்]

சாணக்கியர்:—தர்மசிலரே! வரவேணும். உமக்கு ஸகல மங்களமும் உண்டாகுக.

தர்மசீலர்:—குருநாதா! எங்கள் இடர்ப்பாட்டைத் தங்கள் அருளால் தீர்த்துக்கொள்ளநினைத்தோம். அதன்பொருட்டு வந்தேன்.

சாணக்கியர்:—நிர்மலகுப்தர் இந்நிலனிறந்துசென்றதும் மற்றவையும் தெரிந்தேன். சாமம் சாதுக்கள்பாற் செல்லும். தானம் பொருள்வேட்கையுள்ளவிடத்துச் செல்லும். பேதம் சற்றேறக்குறைய ஒரே தகுதியுடைய இருவரிடத்தன்றிச் செல்லாது. தண்டம் வலிமைமிகுதியாலன்றி நடவாது. நம் மன்னர்செருக்கு நாளடைவிலேதான் திருந்தவேணும்.

தர்மசீலர்:—ப்ருஹ்மசிரேஷ்டரே! காத்தற்ரொழிலைக் கடைப்பிடித்துநில்லா மன்னவன் தன்னிலையின் இழிந்தவனன்றோ? அரசுரிமை அன்பின்பாற்பட்டதன்றோ? வீரமும் படைகளும் அறங்காத்தற்பொருட்டேயன்றோ? தன்னை மறக்கினும் தருமத்தை மறக்கலாகாதே. மறந்து தொடினும் சுடும் தீப்போல வழுவியவரை ஒறுக்குந்தன்மைத்தன்றோ அறம்? 'கொடுங்கோன்மன்னன் வாழு நாட்டிற் கடும்புலிவாழுங் காடுநன்'றென்று கருதி நிர்மலகுப்தர் நாடிறந்து காடடைந்தார். அடக்கியாளுதலாவது: தீயோரை யடக்கி நல்லோரை ஆளுதலாம். இப்பொழுதோ நல்லோர் அறத்தைச் சொல்லாமற் போக்கித் தீமையையாள்வதாயிற்றே!

சாணக்கியர்:—தர்மசிலரே! அரசன் அறந் திறம்பினல், குடிகள் கோல்கடிதலும் உண்டு. அதற்கும் சாஸ்த்ரப்ரமாணமும் சாதுசரித்திரங்களும் உள. ஆனல் அதற்கு ஒற்றுமையுணர்ச்சியும் தன்னலம்வெறுத்துத் தாய்நாட்டின் நலனுணர்தலும் வேண்டுமே.

தர்மசீலர்:—தங்களிடமும் தங்களைப்போன்ற பெரிய குருக்களிடமும் பயின்ற நம் தேசத்துமக்களுக்குப் பொதுஜனநன்மையே போற்றும்பொருளன்றோ. பெருங்கோவின் திறம்பற்றி நிற்கும் மன்னர்களுக்கும் பிரபுக்களுக்குங்கூட அவரவர் நிலை எப்பொழுது என்னவாகுமோ என்று அறியமுடியாதநிலைமை வந்திருக்கிறது. அவர்களும் நீதியுள்ள ஒருவரால் இதற்கு விமோசனம்வரவேண்டுமென்று நினைக்கிறார்கள்.

சாணக்கியர்:—அப்படியா! ஸர்வேசுவரன் எல்லாவற்றிற்கும் வழிவிடுவான். அவன், 'மிகைசெய்வார் வினைகட்கெல்லாம் மே... செயும் வினயம்வல்லா' னன்றோ? இப்பொழுது உங்களுக்கு என்னபலமிருக்கிறது?

தர்மசீலர்:—சாகரனைச் சிறையிலிட்டதில் வாலிபர்குழாம் கறுவுற்றிருக்கிறது. நிர்மலகுப்தரை நாட்டைவிட்டோட்டியதில் பண்பாளரும் படையாளரும் மன்னருக்குப் பகையாளராகியுள்ளார்கள். இங்கிருந்தேகிய தங்கள் அடியான் சந்திரன் பாஞ்சாலர்சேனையின் பெரும்படைத்தலைவனாய் விளங்குகிறானாம்! அவன்வீரம் அளவிடற்கரிதென்று அவனிடமிருந்து சாகரனுக்குக் கடிதங்கொண்டு வந்திருக்கும் இரண்டுசேவகர்களும் சொல்லுகிறார்கள். கடிதங்களைச் சாகரனிடம் சேர்ப்பித்து விடைபெறவேண்டிய ஏற்பாடு செய்துள்ளேன்.

சாணக்கியர்:—சாரணர்தொகுதி எங்ஙனமுளது?

தர்மசீலர்:—அவர்களுக்கு நிர்மலகுப்தர் தலைவரல்லரா? அவரைப்பிரிந்ததுமுதல் அப்படையினரெல்லோரும் அரசனை ஒழிக்க வழிதேடுகிறார்களே.

சாணக்கியர்:—அப்படியாயின், சந்திரனைப் படைத்துணையோடு இங்கு வருவித்து, அவன் வரும்வழியிலுள்ளவர்களை அவனுக்கு உதவியாயிருக்கச்செய்து பட்டணத்தைக் கைப்பற்றி அவன்வசமாக்கி முடிசூட்டுவதே நலம்.

தர்மசீலர்:—அப்படியாயின் இவ்விடத்து எல்லாவிவரங்களையும் சந்திரனுக்குத் தெரிவிக்கவேணும். அது தங்கள் கட்டளையாகவிருந்தால் அவன் உடனே உடன்படுவான்.

சாணக்கியர்:—[ஒரு கடிதமெழுதி] "சிரஞ்சீவி சந்திரனுக்குச் சகல சௌபாக்கியமும் உண்டாவதாக. இவ்விடம் அரசு நிலைந்து அன்பர்கள் உன்னை நாடியுள்ளார்கள். சரியான படைத்துணையுடன்வரின் அரசுபெறலாம். மற்றெல்லாம் உனக்கு உதவியாயிருக்க ஆண்டவன் அருள்புரிவான்" சாணக்கியர். [என்று வாசித்தல்]

தர்மசீலர்:—போதும்; எல்லாம் இதில் அடங்கியிருக்கிறது. அவனும் புத்திமானதலால் எஞ்சியவற்றை ஊகித்துக்கொள்வான். மற்றவைகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

[குனிந்து வணங்கி விடைபெற்றுக் கடிதத்துடன் போதல்.]

அங்கம் - IV.

களம் - 1.

இடம்:—தக்ஷசைலத்தில் ஒரு தோட்டம்.

பாத்திரங்கள்:—விகலன், சித்திராங்கி.

விகலன்:—[கையில் ஓர் ஓலையுடன் தனக்குள்] என்னைப்போல் ஒரு பைத்தியக்காரி உலகில் இன்னொருத்தி இருக்கிறாளா? என்னினும் பைத்தியமென்றாலும் தகும்; நானாவது ஓர் உண்மையான புருஷனிடம் என் மனத்தைவைத்து ஆசைப்பட்டேன். இவள் புருஷவுடுப்பிலன்றோ ஆசைவைத்துவிட்டாள்! ஜகத்தைப் பிரும்ம

சிருஷ்டியென்பதுகூட யோசித்துப்பார்த்தால் சரியன்றென்று தோன்றுகிறது. ஜகத்துமுழுதும் அது பிரதிபலிக்கும் ஒவ்வொரு மனத்தின் சிருஷ்டியே. இல்லாவிடில் என்மேல் ஒருபெண் காதல் கொண்டு என்னை மணஞ்செய்துகொள்ளவேண்டுமென்று நினைக்க நியாயமுண்டா! அதிருக்கட்டும். இந்தப்பெண்கள் பேதைமை நகைக்கத்தக்கது. இந்த ஓலையை இன்னொருதரம் வாசிப்போம். [என்று ஓலையைப் பிரித்து]

'என் மனதேற்ற மன்னவருக்கு: உங்களைத் தரிசித்தநாள்முதல் நான் உங்கள்நினைவாகவே இருக்கிறேன். என்னுயுள் முழுதும் தங்களைத் தவிர மற்றொருபுருஷரை நினையேன். உங்களோடு உரையாட வேண்டுமென்று நான் பலசமயங்களில் நெருங்கியும் நீங்கள் என்னை எப்படியாவது ஒதுக்கிக்கொண்டேவந்துவிட்டீர்கள். அவ்விதம் நீங்கள் செய்ததனால் என்னுடைய காதல் வளர்கிறதேயொழியக் குறைகிறதாயில்லை. இன்று உங்களை எப்படியும் நேரில் கண்டுபேசத் துணிந்துவிட்டேன். பெண்கள்மனம் புண்படச்செய்தல் ஆடவருக்கு அழகல்லவே. ஆதலால் இன்றும் என்னைத் தட்டிக் கழித்துவிடாமல் எனக்கு அருள்புரிவீர்களென்று நம்பும் சித்திராங்கி'

[என்று வாசித்து] பெண்கள் தங்கள்மனத்தைத் தாங்களே புண்ணாக்கிக்கொண்டால் ஆடவர்கள் அதற்கு என்னசெய்வார்கள்? என்னைப் புருஷனாக அடையவேண்டுமென்று இவள் தானே தன்மனத்தைப் புண்ணாக்கிக்கொண்டால் அதற்கு யார்தான் என்னசெய்யமுடியும்? எல்லாம்வல்ல ஈசனுக்கும் இது சாத்தியமென்று தோன்றவில்லை; ஆனால் அவன் ஒரு வழிவிடாமல் இப்படிச் செய்யமாட்டான். தோற்றமெல்லாம் சத்தியமென்றெண்ணி மனம் சலிப்பதனாலன்றோ பல கேடுகளும் உண்டாகின்றன. உள்ளே ஓர் உண்மை இருக்க, வெளியில் தோன்றும் வேற்றுமையால் திரிபுணர்ச்சியேற்பட்டன்றோ மனிதர் துன்பந்தருவனவற்றில் ஆசையும் இன்பந்தருவனவற்றில் வெறுப்பும் வைத்துக் கெட்டுப்போகிறார்கள். விட்டில்கள் விளக்கைப் பழமெனக்கருதி அதை உண்ணவிழுந்து உயிர்மாய்கின்றன. மனிதர்கள் தெய்வமார்க்கத்தைவிட்டு உலகமார்க்கத்திற் பற்றுக்கொண்டு உழல்கின்றனர்;

மருந்திண்ணற்கு அழும் மதலைகளைப்போல் மற்றையோர்சொல்லி னும் மனங்கொள்ளாதிருக்கிறார்கள். அது இருக்கட்டும். இவளுக் கென்ன இப்படிப் பயித்தியம்! என் காதலரைக்கண்டு ஆசைகொள் ளாமல் இம்மட்டில் நேர்ந்ததும் என்பாக்கியந்தான்! சத்ருஜித்தின் ஒரே மகளும் அவருடைய சகல செல்வத்தையும் அடைய வேண்டியவளும் ஆன இவள் என்பேரில் ஆசைகொள்ள என்ன காரணம்? நாற்புறமும் உற்றுநோக்கி அதோ சித்திராங்கி வருகி றாள். நம் சங்கதி அவளுக்குத் தெரிந்துவிடப்போகிறது. நாம் முற்றிலும் புருஷனைப்போலவே நடிப்போம்.

[சித்திராங்கி வருதல்.]

விகலன்:—இந்த ஓலை நீங்கள் அனுப்பினதுதானே?

சித்திராங்கி:—நீங்கள் என்னைக் கௌரவித்துப் பேசலாமா? ஓலையை இன்னும் வாசிக்கவில்லைப்போலிருக்கிறது?

விகலன்:—வாசித்துவிட்டேன்; இருந்தாலும் உங்கள் நிலைமைக் கும் என் நிலைமைக்கும் அதிக ஏற்றத்தாழ்விருப்பதால் மரியாதை தவறுதல் சரியல்லவென்று நினைத்தேன்.

சித்திராங்கி:—என்கடிதத்தில் நான் பெண்புத்தியால் என் னுள்ளம் முழுவதையும் வெளியிட்டுவிட்டேன். நீங்கள் புருஷரான படியால் என்னை இன்னும் பரீக்ஷிக்கிறீர்கள்போலிருக்கிறது.

விகலன்:—நான் இங்கேயிருப்பது உனக்கு எப்படித்தெரிந்தது?

சித்திராங்கி:—அரண்மனையில் நீங்கள் முதன்முதல் விருந் துண்ணவந்தவன்று உங்களைப்பார்த்ததிலிருந்து இந்த நிமிஷம் வரை நீங்களிருக்குமிடங்களையும் செய்யுங் காரியங்களையும் அப் போதைக்கப்போது நான் தெரிந்துகொண்டுதான் வருகிறேன். உங்களை உத்தேசித்தே நான் இதுவரை செல்லாதவீடுகளுக்குச் சென்றும், வாராத இடங்களுக்கு வந்துமிருக்கிறேன்.

விகலன்:—சித்திராங்கி! நீ செய்யுங்காரியம் தவறற்றதாக என் மனத்தில் தோற்றவில்லை.

சித்திராங்கி:—ஏன்?

விகலன்:—உன் தாய்தந்தையர் பார்த்து உன்னை யாருக்கு விவாகஞ்செய்துகொடுக்கிறார்களோ அவரிடம் அன்புவைத்து நேசிப்பதுதான் நெறி. நீயாக என்னை நேசிப்பது நெறியன்று.

சித்திராங்கி:—நீங்கள்சொல்லுவது இனி மனம்வைத்து நேசிக்கவேண்டியவர்களுக்குப் பொருந்தும்; ஆனால் நீங்கள் சொல்லும் புத்தியைக்கொண்டு என்மனத்தைத் திருத்திக்கொள்ளக் கூடியகாலம் வெகுநாளைக்குமுன்பே போய்விட்டது.

விகலன்:—நீ என்பேரில் அன்புபூண்டிருப்பது உன் தாய் தந்தையருக்குத் தெரியுமா?

சித்திராங்கி:—அவர்களுக்கு எப்படித்தெரியும்?

விகலன்:—அவர்களுக்குத் தெரிந்தால் நான் இங்கே இருக்கக் கூட முடியாமற்செய்துவிடுவார்கள்.

சித்திராங்கி:—அவர்கள் அப்படிச்செய்யும்வரை நாம் இங்கே இருப்பானேன்?

விகலன்:—(தனக்குள்) ஆ! பெண்களுக்கு இந்த நெஞ்சுத் துணிச்சல் கூடாது. (வெளிப்படையாக) என் அன்பரான சந்திரருக்குக்கூடக் கெடுதிவிளைவிக்கும் காரியத்தை உத்தேசம் செய்திருக்கிறாற்போலிருக்கிறதே!

சித்திராங்கி:—நான் நதியில்விழுந்திறந்துவிட, நீங்கள் விடைபெற்று ஊர்போய்ச்சேர்ந்தால் நம் இருவர்நினைவும் நிறைவேறும். யாருக்கும் யாதொருகெடுதலும் வராது.

விகலன்:—நான் விடைபெற்று ஊருக்குப்போகுங்காலம் இன்னும் வரவில்லை. நீ நதியில்விழுந்திறந்ததும் நிலைநிற்காது. உண்மை எப்படியும் வெளியாய்விடும். ஆதலால் அதை விட்டுவிடு. அது இருக்கட்டும்; நம்மனதென்று உன்மனத்தோடு என்மனத்தையும் சேர்த்துக்கொண்டது என்ன துணிவு?

சித்திராங்கி:—இவ்வளவுநேரமாவது இப்போது நீங்கள் என்னைப் பொருட்டாய் எண்ணிப் பேசினது போதாதா?

விகலன்:—என்னை விவாகஞ்செய்துகொள்ளமுடியாமல்நேர்ந்து விட்டால் என்னசெய்வாய்?

சித்திராங்கி:—போகாதவூருக்கு வழிதேடுவதில் யாரேனும் பொழுதுபோக்குவார்களா? அவ்விதம் ஒருநாளும் நேராதே!

விகலன்:—நான் வேறொருவரை மணந்துகொள்ளும்படிநேர்ந்து விட்டால்?

சித்திராங்கி:—என்னையும் ஒரு மனைவியாக ஏற்றுக்கொள்ளுங்கள். புருஷர்கள் சித்தந்தான் ஸ்திரமில்லையே! அதன் சலனங்களில் என்னிடத்திலும் ஒருநாள் சலிக்காமலாபோகிறது. பார்த்துக்கொள்வோம். எனக்கு உங்களை மணாளராக அடைந்த மகிழ்ச்சி ஒன்றே போதுமானதாகும்.

விகலன்:—என்னை விவாகஞ்செய்துகொண்டும், மற்றொருவருக்கு நான் படிந்துநடக்கும்படிநேர்கிறதென்றுவைத்துக்கொள்; அப்பொழுது என்னசெய்வது?

சித்திராங்கி:—அப்பொழுதும் உங்கள் மனம்போல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். அவளைப்போல் நானும் ஒரு மனைவியானதால் நீங்கள் எனக்கும் படிந்துநடந்தாலும் சரி. அல்லது உங்கள் உத்தரவின்படி அவளுக்குப் படிந்துநடக்கச் சொன்னாலும் சரி.

விகலன்:—நான் ஒரு பெண்பிள்ளையென்றுவைத்துக்கொள். அப்பொழுது என்னசெய்வாய்?

சித்திராங்கி:—நான்தான் ஆண்பிள்ளையாய்ப்போய்விடுவேனே?

விகலன்:—சித்திராங்கி! உன் செல்வத்துக்கும் பிறப்புக்கும் தகுந்தபுருஷனைத் தேடிக்கொள்வதுதான் உனக்கு அழகு.

சித்திராங்கி:—எனக்கு நீங்கள்தான் அழகு. இளமையும் வனப்புமே பெண்கள்கண்ணுக்குச் செல்வம். உங்கள்பிறப்பு முகத்தில் எழுதியிருக்கிறது. ஆதலின் என்னை நீங்கள் விசேஷமாய்ப் பரீக்ஷிப்பதில் என் பேதைமைதான் வெளிவருமேதவிர வேறில்லை.

கருப்பாற் புனைவெஞ் சிலையுடனைங்
கணையுங் கரந்தைங் கணைக்கிழவன்
விருப்பா லுருக்கொண் டிரதியொடும்
வெளிவந் தனனு மென்பாரே. (௫௬)

2356 வாண்மங் கலப்பொன் னிதழ்க்கமல
மடந்தை புணர்மார் பனைத்துளவத்
தோண்மங் கலமா லிகைபுனைந்த
தூயோன் றனைச்சிந் தையின்வணங்கிப்
பூண்மங் கலப்பொற் பணிக்கழகு
புரக்கும் புதல்வன் பொருவருசீர்
நாண்மங் கலக்கற் பணிமடந்தை
களத்தே நயந்தாங் கணிந்தனனே. (௫௭)

2357 முருகார் நறுமென் குழற்கமல
முகுள முலைப்பொற் றொடிதளிர்க்கை
தருவாழ் கொடைப்புண் ணியன்றடக்கைத்
தடந்தா மரைமீ துறச்செறித்துத்
திருவாழ் மார்பன் றிருமகளுந்
திருநா ரணனு மெனப்புவிமேற்
பெருவாழ் வுறுதி ரெனவுதகம்
பெய்தாங் கொருபாங் கரினிருந்தான். (௫௮)

2358 வானு டரும்பூ சுரர்கணமு
மாரா யமுடன் மலர்மழைபெய்
தானு துரையா சிடையரவத்
தணங்கன் னவரு மருங்கணைந்து
நானு விதப்பொன் மலர்சிதறி
நயந்தாங் குரைபல் லாண்டினொலி
தானுர் கலிவெண் டிரை முழக்கிற்
றழுங்கத் தழுங்கு மணமுரசே. (௫௯)

2359 குலநான் மறைமந் திரங்கிளத்துங்
குர்வர் பணிப்பிற் கொழுங்கனல்வாய்ப்
புலனு லுணர்தற் குரித்தாம்புத்
தேளிர்க் குணவு புரந்ததற்பின்

ஒள்ளிணர்க் கதலிக் காழி
துறுகனி யுலப்பில் பெய்த
வெள்ளிமாண் பரிதி பூண்ட
பண்டிகண் மிகுந்த தோர்பால். (சுஎ)

2367 சொற்றவா யமுத மூறுஞ்
சுவையுடைத் தாகிப் பற்றொன்
றற்றவாழ் வுடையோ ராசை
யகத்துறீஇப் பொறிகண் மூட்டப்
பெற்றமாங் கனிகள் பேரீத்
தம்பழம் பெரிது பெய்த
கொற்றவால் வயிர நேமிப்
பண்டிகள் குழீஇய தோர்பால். (சுஅ)

2368 கொடிதொறுங் கொம்பர் தோறுங்
கூர்கொழும் புனிதப் பைங்காய்
படிபுற நெளிப்பப் பெய்த
பண்டிகண் மிகுந்த தோர்பால்
கடிகம ழுரிச னங்காழ்
கறித்திரள் செக்கி னுட்பெய்
திடிபடு சுண்ண மான்ற
தடாமிடைந் திட்ட தோர்பால். (சுகூ)

2369 முப்புடைத் தெங்கின் பைங்காய்
முதிர்பழங் கமுகிற் கொண்ட
துப்புறழ் பழுக்காய் தீந்தேன்
றுளும்புநன் பசுங்காய் வெண்பொன்
னெப்புடை யடர வாம்வெள்
ளிலையுலப் பிலபெய் தொண்பார்
குப்புற நிலம்பொ திந்திப்
பண்டிகள் குழீஇய தோர்பால். (எ0)

2370 மலயமால் வரையிற் சந்த
மணங்கம ழகில்புத் தேளி
ருலைவில்வா னுரிஞ்சப் பெய்த
வுறுகலிப் பண்டி யோர்பாற்

றுலேவின்மான் மதநன் சாந்தந்
துளங்கிம சலச்செம் புய்த்த
கலேநிலா விரிக்கும் வெண்பொற்
பெட்டகங் கணக்கின் ஞேர்பால். (எக)

2371 முத்தினேக் குன்றுய்த் தன்ன
தண்டுல முகவை பாச்சி
யித்துணே யிதற்கிங் கென்ன
வரம்பரு தேற்றி வந்த
வுத்தமப் பண்டிக் கெண்ணின்
றுழுந்துறு பயறு பெய்த
புத்தவெண் பிறைக்கோட் டும்பற்
புணர்ப்பொறை கணக்கின் ஞேர்பால். (எஉ)

2372 கன்மலே முழைக டோறுங்
களியளி யிழைத்த காமர்
நன்னற விடங்கர் கோடி
நறுநெயின் குடங்கள் கோடி
யின்னமிர் தனேய வான்பா
லேந்துபொற் றசும்பு கோடி
தன்னிகர் பிறிதின் றும்வெண்
டயிர்த்தசும் பநந்த கோடி. (எங)

2373 தலங்தொறு மலிந்த பண்டங்
தமிதமி பொறித்தல் கூற்றின்
குலம்புரி கணக்கர் கூடிற்
கூடுவ தென்ப வாநன்
னலம்புரி பரத்து வாச
ஞரணற் கூட்டு நாளப்
புலம்புரிந் திறுத்த மேன்மைப்
பொருள்வளம் பொருவு மன்ஞே. (எச)

வேறு.

2374 சுருதிப் பனுவற் றொகையுணர்ந்த
தூயோன் மணஞ்செய் திருமனைக்கு
வருதிக் கினர்வன் பசிக்கடிசின்
மதிப்பி னடுவெவ் வழற்புகைபோய்ப்
பருதித் தனிமண் டலத்தளவும்
பரந்த துளதின் றளவுமது
கருதிற் ககனத் திடைதடித்திற்
கருவி மழையென் றுழல்வதுவே. (எரு)

2375 சுடுதற் சுடர்போன் மயர்விருளைச்
சுடர்தூண் டரனிற் றுரந்தரந்தை
தடுதற் குணவாழ் வடைந்தவருஞ்
சத்தா திகடாக் குபுபொறிதாம்
விடுதற் குணவா யருந்துதற்கு
விழையும் படித்தாய் நளபாகத்
தடுதற் றொழின்முற் றினரமிர்து
மமிர்திற் பொருவில் கருணையுமே. (எசு)

வேறு.

2376 அறுசுவைப் புனிதப் பைங்கா யனைத்தையும் வீற்று வீற்று
யுறுசுவை யுடைய வாக வொருங்குதா மமைத்த பின்னர்க்
குறுகுபு நாலெட் டொன்றுங் குழம்புடன் றிரண்ட தீம்பா
னறுநெயி னுலையல் பாகு நனிதக நயந்தட் டாரே. (எஎ)

2377 ஈசன துதாத் தண்டத் தெண்ணிலா வுயிர்க ளிண்டை
யாசனத் தறிவன் பொன்று மடுபுனற் கொடுங்கு மாபோற்
போசன சாலை தோறும் பூசுர ராதி யாய
மாசனம் புக்க தென்றால் வரம்பினை யுரைக்க லாமே. (எஅ)

2378 எண்ணிலாக்கிரணத்தோங்கு மிளங்கதிர் புரைபொற்றாலம்
வெண்ணிலாமருட்டும்வெண்பொற்பரிகலம்விரைபெய்தூநீ
ருண்ணிலாப் பனிற்று மொண்பொற் கரக்ங்க ளுலப்பி லாத
வண்ணலார்முதல்வர்யார்க்குமளவையினமைத்திட்டாரே.

2379 தளவின்மென் முகைபெய் தன்ன வயினியிற் பஞ்ச தாரை
குளமலி பருப்புத் தேனுட் குளித்தமுக் கனியு நெய்துய்
நளனடு பாகத் தட்ட நறும்பொரிக் கறியு மேனை
வளமலி கறிகள் யாவும் வகைவகை விளம்பி னரே. (அ0)

2380 தூயநீ ரங்கை யள்ளிச் சுற்றுபு பருகி யுள்ளத்
தாயபே ருவகை தன்னா லமுதம தமைத்த ஞான
நேயவே தியர்க ளாதி நிலைபெறு சனங்க ளெல்லாம்
பாய்கதிர்ப் பைம்பொற் றூலத் தடிசில்கைப் பற்றி னரே. ()

வேறு.

2381 ஒழியா தடிசில் படைப்பவர்தா
முண்போர் கொழும்பொற் கலங்கடொறும்
பொழியா வருநெய்ப் பெருக்கினைமேன்
மேலும் பொழியக் கலவிளிம்பு
வழியா மிகுந்த பெருக்கன்றே
வற்றாதனவாய் மறிதிரைமாண்
கழியார் படுகர்ச் சுறவெறிநெய்க்
கடலும் வறளா தொலிப்பதுவே. (அஉ)

வேறு.

2382 ஆற்றல்சா லின்னடிசில் கருனை கூடி
யறுசுவைப்பா குடைக்கறிநெய் தயிர்பாலோடும்
போற்றல்சான் முக்கனியி னுகர்ந்த பின்னும்
பொற்கலத்துட் பொலிந்ததல்லான் மெலிந்த தின்றாற்
றேற்றல்சால் பொறிபுலன்க ளொழுக மீட்டுந்
திரட்டியகை யொடுங்குரவன் றிருட்டிக் கென்றே
யேற்றநா ளெதிர்கருதி வயிறு வாய்கை
யெண்ணிறந்த படைத்திலனென் றேக்கற் றாரே. ()

வேறு.

2383 குருமணிக் கடக முன்கைக் கொழும்பொன்னான் முயங்கு மார்பத்
தருமறைக் கிழவ ராதி யவர்கடா மிச்சின் மாற்றி
யுருவளர் களபம் பூசி யுவர்ப்பிலாப் பஞ்ச வாசம்
பருகுபு மாயோ னுமம் பாடினு ராடி னரே. (அச)

வேறு.

2384 கள்ளவிழு மலர்க்குழற்செங் கயற்கண் ணுளுங்
காளையுமவ் விரதவிதி கழித்த பின்னுள்
வெள்ளணியா யவையகற்றி யொருநுண் டூசு
விருப்பினுடீஇ நறுந்தயிலம் விழைவி னுடிப்
புள்ளணியுங் கொடிப்பரமன் கருணை வாரி
பொருவருமுப் பழச்சுனையுட் பூவிராய
தெள்ளறலிற் படிந்தனராய் வெண்பட் டாடை
சிறப்பினுடீ நுதற்றிருமண் டீட்டி னுரே. (அரு)

2385 எண்ணிறைந்த வகைப்படிவத் திழைத்த வூழா
லெய்தியமன் னுயிர்க்கணத்தை யிறையு நீங்கா
துண்ணிறைந்தங் தவற்றினுக்கே யூட்டற் பால
வூட்டியமா யனைவழிபட் டமிர்த மூட்டிப்
பண்ணிறைந்த மறைப்பனுவற் றுணிவா ஞானப்
பழம்பொருளி னுரைகொளுத்திப் பரிவு தீர்க்கும்
விண்ணிறைந்த புகழ்க்குரவர் முதலாம் வேத
வேதியர்க்கு மிருநிதியம் வியப்பி னீந்தார். (அசு)

2386 பொற்கோலம் புரிகலத்து ளமிர்த மானும்
பொருவருதீம் பாலடிசில் புலவுண் வாட்கண்
விற்கோலம் புரிநுதலாள் விருப்பி னேந்த
மேதகவான் மிசைந்ததற்பின் மிச்சின் மாற்றித்
தற்கோல முதலியவாம் பஞ்ச வாசந்
தனைக்கவுட்கொண் டருந்துகில்சாந் தணிதண் டாம
நற்கோலம் புரிந்துபிடி யுடனே யோடை
நன்களிற்றின் பிடரின்வந்தார் நகுபொற் பூணுர். (அஎ)

வேறு.

2387 இயங்குமால் வரையிற் றேன்று
மிளங்கதி ரதனை நாட்ட
மயங்கிருட் பிழம்பை மாய்க்கு
மதிபல வளைத்த போன்றுந்

தயங்குநித் திலவெண் கொற்றக்
குடைகள்சா மரைகண் முந்நீர்
முயங்குவெண் டிரைகள் போன்று
முதல்வனைச் சூழ்ந்த தன்றே. (அஅ)

2388 கொழும்பொன்னு லமைத்த தீபங்
குருமணித் தீப மின்னார்
ஒழுங்குற நிரைப்ப விண்மீ
தொளிகிளர் வெண்பொற் றீபம்
எழுங்கவின் புரைவெண் டிங்க
ளெழுதலும் பவளத் தாமச்
செழுங்கதிர்க் கவிகை கொட்பத்
திருநகர் மறுகு சார்ந்தார். (அகூ)

2389 தழங்கின புரிவெண் சங்கம்
வலம்புரி சலதி யேய்ப்ப
முழங்கின படக மாம்பல்
பேரிகை முழவ மெங்குங்
குழங்கன்மா லிகைமென் கூந்தற்
கோதையர் மதுர கீதம்
வழங்கினர் குழலின் யாழின்
விஞ்சையர் மருள மன்னோ. (கூ0)

2390 பிரசநாண் மலருட் டோன்றல்
பிறங்குபே ரண்டத் துள்ள
வர்சர்மா ணழகை வாங்கி
யழகினுக் கழகு செய்தே
கரசரோ ருகத்துய்த் தானைக்
காணிய வம்மி னென்று
முரசமூன் றுடன்பொற் சின்ன
முறைமுறை முழங்கு மன்றே. (கூக)

2391 செய்யதா மரையிற் ரோன்றுந்
திசைமுகன் படைத்த முந்நீர்
வையமா னதனுள் வைகு
மைந்தருண் மாசி லாத
வையன்மா மேனிக் கொப்ப
தாகநீர் கண்ட துண்டேற்
றையன்மீ ருரைமி னென்றே
தழங்குமோர் செம்பொற் சின்னம். (கூஉ)

2392 ஏடவிழ் தெரிய லான்ற
வினியபே ரழகைக் கண்ட
தோடவிழ் குழலி னர்போற்
றுணைவருந் துயரங் கூர்வான்
பாடல்சால் காந்தி மேய
பண்பனைக் கண்ட துண்டேல்
ஆடவர் சொன்மி னென்றே
முழங்குமோ ரம்பொற் சின்னம். (கூ௩)

2393 மண்ணுளா ரன்றிச் செம்பொன்
வானுளார் தனிலுங் கண்டார்
கண்ணுளா னுகி யுட்கொள்
கருத்தினோர் கணமு நீங்கா
தெண்ணுளான் மிக்க காட்சிக்
கிணையுளா னொருவ னுண்டேல்
விண்ணுளா ருரைமி னென்றே
குளிறுமோர் மிளிர்பொற் சின்னம். (கூச)

2394 இப்புறத் திவனொ டாரு
மிணையிலர் நாகலோகத்
தொப்புற வொருவ ருண்டே
லுரைமினென் றறபா தாலத்

தப்புறத் தினினின் றெய்து
மவரொடும் வினவு மாபோற்
குப்புறு செய்கைத் தாகிக்
குளிறுமோர் கொழும்பொற் சின்னம். (௯௫)

2395 மேதகக் காத நான்கு
விரைகமழ் களபம் பெய்த
சீதளப் பனிநீர் தேக்குஞ்
செழும்பொனி னண்டை வாங்கி
மாதர்தா மைந்தர் மேனு
மைந்தர்தா மாதர் மேனுங்
காதலால் வீசி வீசிக்
களிமயக் குறுவா ரன்றே. (௯௬)

2396 ஆடுவா ரநந்த கோடி
யணியினுக் கழக னென்றே
பாடுவா ரநந்த கோடி
பாடல்சான் மகளிர் தம்மோ
டுடுவா ரநந்த கோடி
யூடினர் நிற்ப வீதி
கூடுவார்த் தொடர்ந்து பெண்மை
குறிக்கொள்வா ரனந்த கோடி. (௯௭)

2397 வளர்முலை முகட்டு வேய்ந்த
வார்புறம் பிணியா முன்னர்க்
கிளர்மணி மாட வீதி
குறுகுதல் கேட்டங் கெய்தத்
தளர்மருங் குறும ஞவுந்
தணந்துதா டளைப்ப மின்னு
ருளமலி நாணென் றின்றி
யோவியம் போல நிற்பார். (௯௮)

2398 வாட்டுணை மலர்க்க ணல்லார்
மைந்தனைக் கடிதிற் காண்பான்
வேட்கையூர் தரலும் பாத
கடகத்தை விரைமென் காந்தட்
டோட்டுணைக் கணியு முள்ளத்
துயவடைந் தனராற் கண்டோர்
நாட்டமு மனமும் வேறு
நடுக்கமென் புகலு மாறே. (கூகூ)

2399 பாண்பயின் மழலை வாயோர்
பைந்தொடி பாங்கி யிற்கேட்
டாண்டகை படிவ முன்னின்
றமைவரக் காண்கின் றுளாய்க்
காண்பதங் கெவனை யென்றே
காணவே குநரை மீட்கு
நாண்டுறந் துரைக்கு மென்று
ணுமினி யுரைப்ப தென்னே. (கoo)

2400 உரைத்தவ டனைப்போற் செம்ம
லுருவெளிப் படநின் றுளோர்
விரைக்குழன் மடந்தை நின்பால்
வேட்கையூர் தரநின் றென்முன்
னிரைத்துயர் மாட வீதி
நின்றமால் யானை வாயில்
வரைத்தலை வணக்கு றுதுள்
வந்தவா றுரைத்தி யென்பாள். (கoக)

2401 கொற்றவேல் விழியி னுளோர்
கொடியிடை குமர நின்பேர்
கற்றடி வணங்கி னுர்க்கக்
கலைகடாம் பலவு மீதி

பற்பல மகளி ராய்நின்
பவனியே பணிவார் மானப்
பொற்கலை பலவுங் கொள்ளும்
புலமையி தெவன்கொ லென்பாள். (௪0௨)

2402 காதல்வந் தடிக்கொண் மென்சொற்
பெதும்பையர் காளை மார்பிற்
சிதநாண் மலர்த்தண் டாமந்
திருத்தகைத் தென்னக் கேட்டு
மாதர்கொண் டறியாப் பேதை
மாதர்வண் டலம்பா வைக்கித்
தாதுலா மாலை வாங்கித்
தருதிரென் றுரைப்ப ரோர்பால். (௪0௩)

2403 வாமமே கலைதோ யல்குன்
மங்கைமார் காளை மார்பிற்
ருமமே யரிய தொன்றுந்
தவமுன மிழைத்த தென்பார்
காமனே யனங்க னென
காரண மவன்செங் கோன்மைச்
சேமமே யென்பார் நங்கை
தெரிவைமார் திலக மென்பார். (௪0௪)

2404 மதுமடை திறக்கு மென்பூ
மலர்க்குழன் மடந்தை மார்கள்
புதுமதி முகத்தி னன்றன்
பொறிகுலா மார்பிற் கன்றி
நொதுமலர் மார்பந் தீண்ட
நோற்றநுங் கட்கே னென்னக்
கதுமென முலைமேற் பெய்த
களபங்க டிமிர்வ ரோர்பால். (௪0௫)

2405 ஆற்றல்சால் புனிதன் மேனி
யடிக்கடி தழுவ வையம்
போற்றல்சான் மலர்மென் செவ்விப்
பொலங்கழல் வருட மேனாள்
நோற்றிடா நுங்கட் கென்னோ
நொடைமலி வளையென் றெண்மை
தோற்றவா ணுதலா ரங்கைத்
துணைவளை யுடைப்ப ரோர்பால். (கoசு)

2406 வீக்குபொற் கழலி னுன்றன்
விழுமிய முகத்தை நீங்கள்
நோக்கெதிர் நோக்க மேனு
ணோற்றநோன் பொன்றி லாதிங்
கேக்கறு நுங்கட் கென்னோ
வெழுதுமஞ் சனமென் றின்ன
லாக்கமுற் றழுத கண்ணீ
ரஞ்சன மழிப்ப ரோர்பால். (கoஎ)

2407 பொய்யில்வான் கலைக ளாய்ந்த
புண்ணியன் புனிதம் வாய்ந்த
மெய்யினைத் தழுவ மேனாள்
விழுத்தவஞ் சூர்ந்தி லீராற்
றெய்யிலே னுமக்கென் றேமென்
றோளின்மே லெழுதுந் தொய்யில்
கையினாற் றுடைத்துக் காமங்
கனற்றவே கலுழ்வ ரோர்பால். (கoஅ)

2408 புடைமணிப் பந்து முன்றிற்
புறமிகந் ததனொ டாணு
திடைமறு கெய்தி மீள்வோ
ரேந்தல்சென் றெய்த வுண்கட்
படைகொடு தொடுத்த நோக்கங்
களைதலாற் பந்துங் கைவிட்
டுடையதந் நிறையு நாணு
மொருங்கிழந் துழல்வ ரோர்பால். (கoகூ)

2409 தனப்பொறை சுமக்க லாற்றுத்
தளர்மருங் குகுத்த கண்ணீர்
எனப்படு முத்த மாலை
யிரங்குமே கலைக ணீப்ப
மனப்படு நாணு நீத்த
வரிவையர் மறுகி னீண்டிக்
கனத்தகிம் புரிவெண் கோட்டுக்
களிற்றினைத் தொடர்வ ரோர்பால். (கக0)

2410 அறந்தலைப் பெய்த வுள்ளத்
தையனைக் கண்ட போழ்தே
மறந்தலைப் பெய்த வாட்கட்
டெரிவையர் மலர்க்கண் யாவும்
துறந்தவன் கவினை தோய்கை
துறவுளார்க் கிறைவன் காட்சி
பிறந்தபின் புறப்பற் றெல்லாம்
பெயர்ந்தது பொருவு மன்றே. (ககக)

2411 புலவர்வாய்ச் சிறப்பிற் கேற்ற
புனிதனைத் தொழுத காதற்
றிலகவா ணுதலார் தூய
தேமலர்க் குவைக ளாலுங்
கலகமா மதவே ளெய்த
காமர்பூங் கணைக ளாலு
மலர்நொடை மாக்கள் கூல
வளந்தரு மறுகு மன்னே. (ககஉ)

வேறு.

2412 கற்றார் புகழ்நங் கையைப்போலுங்
காமர் கொழுநன் றனைமுயங்கப்
பெற்றா ரெவர்மேற் பெறவிருக்கும்
பெற்றி யினர்யார் மலிதிரையூர்ந்
தெற்றார் கலிசூ ழிருநிலத்தென்
றெழின்மா ளிகைமே னிலத்தடைந்த
முற்றா முலையார் விழியிமையா
முறையா லரமங் கையரொத்தார். (ககங)

2413 பொன்மா ளிகையி னிடைநிலத்துப்
புனைமா டகயா ழிடந்தழுவிப்
பன்மா மலர்தூய் வியப்பினராய்ப்
பணிவார் மதலை படருதலும்
நன்மா ளிகையே பிடியினொடு
நடைகற் றிலையென் றினைந்திரங்கும்
வின்மா னுதற்பைங் கணைவிழியார்
விஞ்சை மகளிர் தனையொத்தார். (ககச)

2414 இறுமாந் தொருமூ வுலகினுக்கு
மிடர்ப்பா டியற்றி யெதிரிலையாய்
உறுமாண் பிலம்புக் கவருயிருண்
குவமென் றிடைநோக் குறும்பருவம்
பெறுமாண் புடைக்குங் குமமுலைப்பே
ரிளம்பெண் ணிறுவாம் வனிதையர்தாம்
நறுநாண் மலர்மார் பகம்விரும்ப
நகர்மா மறுகு நடந்தனனே. (ககரு)

வேறு.

2415 மாதங் கத்தினில் வருமண மகன்மன மகிழ்காமர்
மாதங் கத்தினை மயன்முத லவர்மன மருள்கூர்வான்
மாதங் கத்தமை மாளிகை மேலவர் கண்டேயம்
மாதங் கற்பணி பெறமல ரடியிணை வந்திப்பார். (ககசு)

வேறு.

2416 கடந்தழை கரட நால்வாய்க்
களிற்றினின் றிழிந்து கஞ்சத்
திடந்தழை திருவாழ் மார்பற்
றெழுதிரு நிதிய மீந்து
திடந்தழை மறையோ ராசி
திருத்தக மொழிந்த பின்றை
மடந்தழை மடந்தை வைகு
மணமனை வாயில் சார்ந்தான். (ககஎ)